ஜெயம்
Jayam
எமது பால் என்றும் பாதுகாப்பானது
இரசாயணம்
பால் மா
நியாயமான விலை
தரமான சுவை...
தொடர்புகளுக்கு:-
321,பிரதான வீதி செங்கலடி
218,திருமலை வீதி மட்டக்களப்பு } 0652240014/47
32,இராஜவரோதயம் வீதி திருகோணமலை 0263207229

அறைவு 02 இயம் 05 September 07- 13.09.2013

# மலைமுரசு
MALAIMURASU
வார இதழ்
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 25.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 16 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை

## திருமலை வளாக விவகாரம்

# வளாகத்தை மாற்ற இடமளிக்க மாட்டேன்

-துணைவேந்தர்-

திருகோணமலையில் இயங்கும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளாகநிர்வாகத்தை கொழும்பு பல்கலைக்கழகத்திற்கோ அல்லது ஸ்ரீஜெயவர்தனபுரப் பல்கலைக் கழகத்துக்கோ மாற்றுவதற்குத் தாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா அவர்கள் மலை முரசிற்குத் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக் 15

புல்மோட்டை காணிச் சுவீகரிப்பு


## "நிலஅளவை செய்தால்தான் மக்களின் காணிகளை அடையாளம் செய்ய முடியும்"

-பிரதேசச் செயலாளர்-

புல்மோட்டையில் எரியும் பிரச்சனையாக மாறியுள்ள காணிச் சுவீகரிப்பு முயற்சிகள் தொடர்பாக மக்கள் சார்பாகவோ அல்லது அரசின் சார்பாகவோ நடவடிக்கைகளை எடுப்பதற்கு அக் காணிகள் நில அளவைத் திணைக்களத்தால் நிலஅளவை செய்யப்பட வேண்டும் என குச்சவெளிப் பிரதேச சபைச் செயலாளர் திரு. உமாமகேஸ்வரன் அவர்கள் தெரிவித்தார்.

நிலச் சுவீகரிப்புத் தொடர்பான உண்மை நிலை என்ன? என வினவியபோது தனது கருத்தைத் தெரிவித்த அவர் புல்மோட்டையில் பிரச்சினைக்குரியதாகக் கருதப்படும் இடங்களை இரண்டு பிரிவிற்குள் கொண்டு வர முடியும் . அவை முறையே தொல்பொருட் 15

## அரியநேந்திரனின் 90 நிமிடங்கள்



குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் கடந்த செவ்வாய்க் கிழமை சுமார் 90 நிமிட நேர விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுடன் தற்போதும் அவர் தொடர்புகளைக் கொண்டுள்ளாரா? என்பது தொடர்பாகவே அவ் விசாரணைகள் இடம் பெற்றதாகத் தெரிகின்றது. 15

## மனைவியின் காதலன் - கணவனின் கொலைஞன்?

மட்டக்களப்பு கல்லடியில் கடந்த முதலாம் திகதி கத்திக் குத்துக் காயங்களுடன் சடலமொன்று மீட்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கொல்லப்பட்டவர் 30 வயதான க.புவனேந்திரன் என்பவர் எனத் தெரிய வந்தது. குழந்தையொன்றின் தகப்பனான இவரது உடலம், கல்லடி வேளாங்கன்னி ஆலய வீதியில் உள்ள பாழடைந்த வளவில் இருந்து மீட்கப்பட்டதைத் தொடர்ந்து அவரது மனைவியின் மீது சந்தேகம் கொண்ட காத்தான்குடி காவல் துறையினர் அவரைத் தேடியபோது அவர் தலைமறைவானது தெரிய வந்துள்ளது. எனினும் கிடைத்த மேலதிக தகவல்களைக் கொண்டு இம் மனைவியுடன் 15

## உப்புக்கரச்சிப் பிரதேசத்தில் மண் கடத்தப்படுகின்றதா?

திருகோணமலை நகரில் இருந்து நிலாவெளிக்குச் செல்லும் வழியில் 6ம் கட்டை பெரிய குளத்தை அண்டிய உப்புக்கரச்சி, துண்டிமலைப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக சிலர் மண் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பகுதியில் 10 வருடங்களுக்கு மேலாக இதுபோன்ற மண்கடத்தல் நடைபெற்று 15

## நவநீதம்பிள்ளை வருகைக்கும் பிச்சைச் சம்பளத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை

கிளிவெட்டி முகாமில் வாழும் மக்களுக்கு சமுர்த்தி நிவாரணம் கடந்த வாரம் வழங்கப்பட்டதற்கும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை விவகாரங்களுக்கான ஆணையர் நவநீதம் பிள்ளை அவர்களின் வருகைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என மூதூர் பிரதேசச் செயலாளர் திரு. பிரதீபன் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

கடந்த வாரம் மலைமுரசில் வெளியான இரண்டு செய்திகள் தொடர்பாகத் தனது மறுப்பறிவித்தலை விடுத்த அவர் முகாமிலுள்ள மக்களுக்குச் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனத் தான் பல நாட்களுக்கு முன்பிருந்தே முயற்சித்து வந்ததாகத் தெரிவித்தார். தனது முயற்சியை மாவட்டச் செயலாளரும் அங்கீகரித்து இருந்ததுடன் கடந்த மாதத்தில் 15




aat SRI LANKA
@
Veal Business College,
No.159 A, Sea View Road,
Trincomalee
026 2227622
077 0203201
aat SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2வது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

### பொது அமைப்பின் தேவை!

கடந்த சில வாரங்களாக எமது பத்திரிகையின் பிரதான பேசு பொருளாக இருப்பது திருமலை வளாக விவகாரமே. இன்னும் பலவாரங்களுக்கு அவ் விடயம் தொடர்பாகப் பலருடைய கருத்துக்களை கேட்டறிந்து கொள்ள மலைமுரசு முயற்சிக்கும்....

ஆனால் எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாத முயற்சியாக கிழக்கை விட்டு திருமலை வளாக நிர்வாகத்தை மாற்ற முயற்சிப்பதை யிட்டுப் பொதுமக்கள், படித்தவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் அமைதியாக இருப்பது ஏன்? என்ற கேள்வி என்னுள் எழுகின்றது.

பொதுவாகவே பயம் படித்தவர்களிடையே பரவிக் கிடக்கின்றது. அப் பயம் ஏன் எழுகின்றது என்றால் இவ்விடயத்தை நாம் தட்டிக்கேட்டால் எம் பொட்டுக்கேடுகளை யாரும் சுட்டி நிற்பார்களோ? என்ற முதலாவது பயம்... இரண்டாவது அதனைத் தட்டிக் கேட்பதால் தனிப்பட்ட நன்மையை இழந்து விடுவோமே என்ற இரண்டாவது பயம்...

சரி! அவ்வாறாயின் இதனைத் தட்டிக் கேட்பது அல்லது எதிராகக் குரலெழுப்புவது யார்? என்ற கேள்விக்கு மக்களின் சுட்டு விரல் தமிழ் அரசியற் தலைவர்களைக் காட்டி நிற்கின்றது. அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை நாம் எல்லோரும் பார்த்தும், கேட்டும், அனுபவித்துக் கொண்டும் இருக்கின்றோம்.

அதற்கும் மேல் யாரிந்தத் தீமையைத் தட்டிக் கேட்பது? என்ற கேள்விக்கு, திருமலை மாவட்டம் இவ் விடயத்தில் ஏதிலியாகப் போய்விட்டது என்ற உண்மை நெருப்பாய்ச் சுடுகின்றது.

ஏனைய மாவட்டங்களிலெல்லாம் கேட்பதற்கு ஒன்றில் மனவலுக்கொண்ட அரசில்வாதியோ, அல்லது உறுதி மிக்க அமைப்புக்களோ உள்ளது. போர் உக்கிரம் பெற்றோய்ந்த கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கூட மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்கு, எடுத்தியம்புவதற்கு அரசியல் தலைவர்களும் பொது அமைப்புக்களும் உருவாகியுள்ளன. மட்டக்களப்பில் சிவில் சமூகம் என்ற அமைப்பு இவ்வாறு பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தை மாற்றுவதை எதிர்த்துக் கடும் முயற்சியில் இறங்கியுள்ளது.

ஆனால் திருகோணமலை மிக அமைதியாக, எவராவது எமக்குரியதைப் பெற்றுத் தரட்டும் இல்லாவிட்டால் அது இல்லாமலே போகட்டும் என்று இருக்கின்றது. இவ் விடயம் உங்களைச் சுடவில்லையா? அல்லது பல்கலைக்கழகம் ஒன்றின் தேவையை நீங்கள் உணரவில்லையா?

இவ்வகை விடயங்களை எமக்காகக் கேட்பதற்குப் பொது அமைப்பொன்றை உருவாக்க வேண்டிய தேவை எம்முன் எழுந்து நிற்கின்றது. திருமலைக்கு நன்மை செய்ய விரும்பும் எவரும் எம்முடன் கைகோர்க்கலாம். வாருங்கள்.. தெருத்தேரை இழுப்போம்....

# ஜித்தாவில் இருந்து மற்றொரு இளம் பெண்ணின் சடலம்

ஜித்தாவில் பணியாற்றிய இளம் பெண் ஒருவர் நாலுவருடங்களின் பின் சடலமாக கிழக்கிலங்கைக்குக் கிடைத்துள்ளார்.

மட்டக்களப்பு, வாகரை, ஓமடியாமடுவைச் சேர்ந்த யோகேஸ்வரன் சாந்தி (வயது 24) என்ற இளம் பெண்ணே இவ்வாறு சடலமாக திருப்பியனுப்பப்பட்டுள்ளார்.

தற்கொலைசெய்து கொண்டதாக அனுப்பப்பட்ட பெண்ணின் சடலத்தில் உடலெங்கும் பயங்கரமான காயங்கள் காணப்பட்டுள்ளன. அவரது மரணம் தொடர்பாக சந்தேகம் கொண்டுள்ள அவரது பெற்றோர் மரணத்திற்கான உண்மைக் காரணத்தை கண்டறிய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர். இம் மரணம் தொடர்பாக அவரது குடும்பத்தார் தெரிவிக்கையில், 10.10.2009ல் பணிப்பெண்ணாக சவூதி சென்ற சாந்தி அதற்குப் பின்னர் இரண்டு தடவைகள் மட்டுமே எம்முடன் தொலைபேசியில் பேசியுள்ளார். அதன் பின்னர் அவரைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்ட போதும் அது கைகூடவில்லை. இந் நான்கு வருடமும் அவரிடம் இருந்து எவ்விதமான பணமோ, கடிதங்களோ எமக்குக் கிடைக்கவில்லை. தற்போது அவரின் சடலம் மட்டுமே எமக்குக் கிடைத்துள்ளது என்றார்.




அவ்விடயத்தை தேசிய மனித உரிமை ஆணைக்குழு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் போன்றவற்றிற்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அவரது உடலத்தில் முகம், கை, கால், மார்பு, கழுத்து ஆகிய பகுதிகளில் சூட்டுக்காயத் தளும்புகளும், அடிகாயங்களும் காணப்படுவதால் தமது மகள் சித்திரவதைப் பட்டே மரணித்திருக்க வேண்டும் எனக் கவலையுடன் அவர்கள் தெரிவித்தனர்.


# ஆலயத்திற்கு மறுப்பு - விகாரைக்கு அனுமதியா?

"திருக்கோவில் பிராந்தியத்தில் ஐந்து இடங்களில் தொல்பொருள் தடயங்கள் இருப்பதால் அதற்கு அடையாளமிட்டுள்ளோம். அப்பகுதிகளில் விகாரை அமைக்கவோ சிலை வைக்கவோ அப்பகுதிகளில் அடையாளமிடவில்லை" என்று சுட்டிக்காட்டி தொல்பொருட் திணைக்களத்தினால், திருக்கோவில் பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினத்திற்கு அறிக்கையொன்று கையளிக்கப்பட்டுள்ளது.



அம்பாறை மாவட்டத்திலுள்ள சங்கமன்கண்டி மற்றும் தங்கவேலாயுதபுரம்மலையில் பௌத்த விகாரை அமைப்பதற்கான முனைப்புகள் நடைபெற்று வருவதாகக் கிடைத்த செய்தியினை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான மு.இராஜேஸ்வரன், த.கலையரசன் ஆகியோர் நேற்று சனிக்கிழமை அப்பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தனர்.





அவர்களுடன் ஆலையடிவேம்பு பிரதேசசபை உறுப்பினர் ரி.காளிராஜா திருக்கோவில் பிரதேசசபை உறுப்பினர் எஸ்.சந்திரகுமார் மற்றும் இந்துசமய பிரதிநிதிகள் ஆலய நிருவாகியுளும் சென்றிருந்தனர்.

சங்குமண்கண்டி மலையில் ஆலயம் அமைக்கும் பணிகள் தொல்பொருள் திணைக்களத்தின் தலையீட்டையடுத்து கைவிடப்பட்டது. இந்நிலையில் பௌத்த விகாரை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தமிழ் மக்களின் மனங்களில் மிகுந்த வெறுப்பை ஏற்படுத்துவதாக உள்ளதென கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான மு.இராஜேஸ்வரன் த.கலையரசன் ஆகிய இருவரும் தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே, "திருக்கோவில் பிராந்தியத்தில் விகாரை அமைக்கவோ சிலை வைக்கவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை" என்று தனக்கு கிடைத்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளதாக திருக்கோவில் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

## சட்டவிரோத ஆட்கடத்தலாளிகள் கைது

திருகோணமலையில் சட்ட விரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்த இருவரைக் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

ஆஸிக்கு ஆட்களைப் படகு மூலம் அனுப்பும் கைங்கரியத்தை மேற்கொண்டிருந்த இவர்களை ஆஸி செல்லும் போது கைதானவர்கள் அளித்த துப்புக்களைக் கொண்டு கைது செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குற்றப் புலனாய்வுத் துறையும், துறைமுகக் காவல்துறையும் இணைந்தே இவர்கள் இருவரையும் கைது செய்ததாகவும் அவர்களில் ஒருவர் திருமலை நகரப் பிரதேசத்தையும் மற்றையவர் புல்மோட்டைப் பகுதியையும் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

பல்கலைக்கழகங்களில் இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கை நெறிகளின் காலக்குறைப்பிற்கு எதிராக கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் இன்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

வந்தாறுமூலை பல்கலைக் கழகத்திற்கு முன்பாக சுமார் ஒரு மணித்தியாலமாக நடைபெற்றஇவ் ஆர்ப்பாட்டத்தில் அனைத்து மருத்துவ பீட மூவின மாணவர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## முதலமைச்சரின் வாகனத்தால் மோதுண்ட சிறுவன்

கிழக்கு முதலமைச்சரின் வாகனத்தால் மோதுண்டு சிறுவன் ஒருவன் காயமடைந்துள்ளதாகத் தெரிகின்றது.

பாதசாரிக் கடவையில் தெருவைக் கடக்கும் போதே இப் பதினொரு வயதுச் சிறுவன் வாகனத்தால் மோதுண்டதாகவும் திருமலைப் பொது வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்ட சிறவன் மேற் சிகிச்சைகளுக்காகக் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுமுள்ளார்.

அவ் வாகனத்தில் அச் சமயம் முதலமைச்சர் பயணிக்கவில்லை. அவ்வாகனச் சாரதி காவல்துறையால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு முகம்கொடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியத் தலைவரும் நெல்சன் மண்டேலாவும்

விக்ரமபாகு கருணாரத்ன

[நன்றி-ஜேவிபி இணையம்]

தென்னாபிரிக்க சுதந்திர போராட்ட வீரர் மண்டேலாவும் வெள்ளையர்களை குண்டு வைத்துக் கொலை செய்தவர் தான். ஆனால், இன்று மண்டேலாவை அகில உலகமே மாமனிதராகப் போற்றுகிறது. ஆனால் தன் இனத்திற்காக போராடிய தேசிய தலைவர் பிரபாகரனை தீவிரவாதி எனக் கூறுகின்றார்கள். இது ஏன் நவநீதம் பிள்ளைக்கு கூட விளங்கவில்லை? என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட விக்கிரமபாகு மேலும் தெரிவித்ததாவது,

சிறிலங்கா வந்திருந்த நவிப்பிள்ளை, அரசிற்கு எதிராக மாத்திரம் குற்றங்களை சுமத்தி விட்டுச் சென்றுள்ளனார் எனக் கூறப்படுகிறது. ஆனால், இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும் கடுமையாக விமர்சித்து விட்டுச் சென்றுள்ளார்.

புலிகளின் செயற்பாட்டை முற்றாக நிராகரித்தே இவர் கருத்துகளையும், விமர்சனங்களையும் தெரிவித்துள்ளார்.

நவிப்பிள்ளை ஒன்றை மாத்திரம் தெரிந்து கொள்ள வேண்டும், அவர் வாழும் நாடான தென்னா பிரிக்காவின் தலைவரான நெல்சன் மண்டேலாவும் பிரபாகரன் செய்ததையே தான் செய்தார்.

மண்டேலாவும் பல வெள்ளையர்களை குண்டு வைத்துக் கொலை செய்தவர் தான். ஏன், அவர் மனைவிக்கு எதிராகவும் பல குற்றங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், இன்று அவர் அனைவராலும் போற்றப்படுகின்ற, சர்வதேசமே மதிக்கின்ற ஒரு மனிதராக இன்று வாழ்ந்து வருகிறார். காரணம், அவர் தம்மின மக்களுக்காக நடத்திய போராட்டத்தில் வெற்றி பெற்றார். அதனால்தான், இன்று இவ்வாறான நிலையிலுள்ளார்.

அதே செயற்பாட்டைத்தான் பிரபாகரனும் அன்று செய்தார். ஆனால், இன்று சர்வதேசத்தின் முன் ஒரு பயங்கரவாதியாக முத்திரைக் குத்தப்பட்டுள்ளார். பிரபாகரன் போராட்டத்தை மேற் கொண்டவிதம் பிழையாக இருக்கலாம். ஆனால், தமது இன மக்களுக்காகப் போராடிய இவரது குறிக்கோளை ஒரு போது பிழையென்று கூறவே முடியாது. இங்கு நடைபெற்ற யுத்தம் மன்மோகன் சிங் மற்றும் சோனியாவின் யோசனைகளின் படியே நடைபெற்றது. தற்போது நடைபெறுகின்ற அபிவிருத்திகளும் இவர்களின் ஆலோசனைகளின்படியே இடம் பெறுகின்றன. இவர்கள் ஏதோ இந்த அரசின் உறவினர்கள் போல செயற்படுவது மிகவும் வேடிக்கையாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வாரம் ஒரு சலனப்படம்

[படப்பிடிப்பு அனுர-உதயா]



# மகசீன் சிறையில் அரசியற் கைதி உயிரிழப்பு - சாவில் சந்தேகம் கொள்ளும் மனைவி -

மகசீன் சிறைச்சாலையில் தமிழ் அரசியற் கைதியொருவரின் மரணம் தொடர்பாக மனைவி சந்தேகம் வெளியிட்டுள்ளார். சிலாபத்தில் வைத்து 2007ல் கைது செய்யப்பட்ட மாகுருவே பிரான்ஸிஸ் கெல்சன் மரணமானதாக அவரது குடும்பத்திற்குத் தெரிவிக்கப்பட்டள்ளது. எனினும் அதற்கு முதல் நாள் இரவு அவர் தன்னுடன் சகசமாகப் பேசியதாக மனைவி தெரிவித்துள்ளார்.

இறந்தவர் புலிகளின் கட்டளைத்தளபதியான பால்ராஜ் அவர்களின் நெருங்கிய உறவினர் ஆவார். சாவடையும் போது இவர் 37 வயதானவராக இருந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பாக விசாரணை நடாத்த வேண்டும் எனக் கோரியுள்ள அவரது மனைவி கணவனின் சடலத்தைப் பொறுப்பெடுத்து சிலாபத்திற்கு கொண்டுவர போதுமான வசதி இல்லாதிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக மாவை சேனாதிராசா அவர்களின் கவனத்திற்குக் பொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து சிறைச்சாலைகள் அமைச்சருடன் இவ் விடயம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# பிள்ளையின் கருத்தைக் கருத்திற் கொள்ள வேண்டும் - ஆசிய மனித உரிமைச் சபை

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இறுதியாக எழுப்பியுள்ள இலங்கை தொடர்பான கருத்துக்கள் தொடர்பில், ஐக்கிய நாடுகளும் பொதுநலவாய அமைப்பும் கவனம் செலுத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்பு சபை கோரிக்கை விடுத்துள்ளது.

நவநீதம்பிள்ளை தமது விஜயத்தின் இறுதியில் இலங்கையில் படையினரின் அச்சுறுத்தல், விமர்சனங்கள் குறித்து கருத்து வெளியிட்டிருந்தார்.

இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகள் ஆபத்தானவை என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தநிலையில் பொதுமக்கள் அமைதியான முறையில் தொந்தரவுக்கு உள்ளாக்கப் படுகின்றனர் என்று அவர் கூறிய கருத்து கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று என்று சர்வதேச மன்னிப்பு சபையின் ஆசிய பசுபிக் உதவி பணிப்பாளர் பொலி ட்ரஸ்கோட் தெரிவித்துள்ளார்.

அத்துடன் போர் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்ளூர் விசாரணைகள் உரியமுறையில் நடத்தப்படவேண்டும்.

இல்லையேல் சர்வதேச விசாரணைகள் அவசியப்படும் என்று அவர் கூறியிருப்பதை ஐக்கிய நாடுகளும் பொதுநலவாய அமைப்பும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று ட்ரஸ்கோட் வலியுறுத்தியுள்ளார்.

# பொட்டு அம்மானின் மூத்த சகோதரர் சாவு

இரகசியமாக யாழ்பாணத்தில் தங்கியிருந்த போது பொட்டு அம்மானின் மூத்த சகோதரனான சண்முகலிங்கம் சிவஞானகுமார் மாரடைப்பால் சாவடைந்ததாக தெரிகின்றது.

ஜெர்மனில் பிரஜாவுரிமையை பெற்ற அவர் ஜூன் மாதமளவில் இலங்கை வந்திருந்ததாகவும் அத் தினத்திலிருந்தே அவர் அரியாலையில் தமக்குரிய பூர்வீக வீடொன்றில் குடியிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

எனினும் அவ் வீட்டில் அம் மூத்த சகோதரர் அடாத்தாகவே தங்கியுருந்ததாகவும் அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

யாழ் நல்லூர் கோவிலுக்கு முன்புறமாக மிதி வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த போது ஏற்பட்ட இதய அடைப்பால் இவர் சாவடைந்ததாகவும் அதன் பின்னர் அவரது உடலத்தை இலங்கையிலுள்ள ஜேர்மனியத் தூதுவராலயம் பொறுப்பேற்று எடுத்துச் சென்றுள்ளதாகவும் அவ் இணையத் தகவல் தெரிவிக்கின்றது.

# விடுவிக்கப்பட்டு இரு வருடங்களில் மீண்டும் தடுப்பிலிடப்பட்டுள்ள பெண் போராளி - ஆஸியில் சம்பவம்



விடுதலைப் புலிகளின் பெண் தளபதிகளில் ஒருவராகப் பணியாற்றிப் பின் ஆஸிக்குச் சட்ட விரோதமாகத் தப்பியோடி அடைக்கலம் பெற்றிருந்த போராளிப் பெண் ஒருவர் இருவருடங்களின் பின் மீண்டும் தடுப்பிலிடப்பட்டுள்ளார்.

ஏற்கனவே போராளி யொருவரை மணம் புரிந்து மூன்று பிள்ளைகளின் தாயான அவர் குழந்தைகளுடன் 2011ம் ஆண்டில் ஆஸி சென்றடைந்துள்ளார்.

34 வயதான ரஞ்சனி ஆஸியில் மறுமணம் செய்து கர்ப்பமாயிருந்த போது மீண்டும் தடுப்பிலிடப்பட்டுள்ளார். அவரை ஆஸி தற்போதும் அகதியாகவே கருத்திற் கொள்வதாகத் தெரிகின்றது.

# பாலியல் லஞ்சம் கேட்ட அதிபரின் படுக்கை சிறைக்குள் போனது

முதலாம் தரத்திற்கு பிள்ளையை சேர்த்துக்கொள்வதற்காக அந்த பிள்ளையின் தாயிடம் பாலியல் இலஞ்சம் கேட்ட அதிபர் ஒருவரை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினர் கைது செய்துள்ளனர்.

கொட்டாவ ஆனந்த வித்தியாலயத்தின் அதிபரே இன்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். பாலியலை இலஞ்சமாக பெற்றுக்கொள்வதற்கு வேரஹெர ஹோட்டலில் தங்கியிருந்தபோதே அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதிபர் தன்னிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்ததாக பிள்ளையின் தாய் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் ஏற்கெனவே முறைப்பாடு செய்துள்ளார்.

அதைத் தொடர்ந்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் அதிபருக்கு பாலியல் இலஞ்சத்தைத் தருவதாக போலியாக ஒத்துக் கொள்ளுமாறு தாய்க்கு அறிவுறுத்தியுள்ளனர்.

அதைத் தொடர்ந்து தனது சொந்தச் செலவில் விடுதியில் அறையொன்றை வாடகைக்குப் பெற்று அதிபர் அத்தாயை அங்கு வருமாறு அழைத்துள்ளார். முதலில் தாயை உட் செல்ல அனுமதித்த அதிகாரிகள் சிறிது நேரத்தில் அறையினுள் புகுந்து சுற்றிவளைப்பாக அதிபரைக் கைது செய்துள்ளனர்.

# போராளிகளின் வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம்

புலிகளுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்க தனியாக மேல்நீதி மன்றொன்று திறக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரத்தில் செப்டெம்பர் மாதம் 6ம் திகதி திறந்து வைக்கப்பட்ட இந் நீதிமன்றில் புலிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் விரைவாக விசாரிக்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந் நீதிமன்றைத் திறந்து வைத்துப் பேசிய பிரதம நீதியரசர் கருணை, இரக்கம் மற்றும் பரிவு போன்றவற்றாலேயே இந் நீதிமன்றம் திறக்கப்பட்டுள்ளதாகவும் சர்வதேச அழுத்தங்களுக்கு உட்பட்டல்ல என்றும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக்குள்ளாகும் கூட்டமைப்பின் இரட்டை நிலைப்பாடு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், அவரது உதவியளார் போல் செயற்படும் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட மதியாபரணம் சுமந்திரனும் அண்மையில் கனடாவிற்கும், ஐக்கிய இராட்சியத்திற்கும் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

பிரிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக புலம்பெயர் தமிழ் மக்களுக்கு விளக்கமளிக்கப்பதற்காகவே இப்பயணம் மேற்கொள்ளப்பட்டதாக கூட்டமைப்புத் தரப்பில் கூறப்பட்டாலும், தேர்தல் செலவுக்கான நிதியினைச் சேகரிப்பதற்காகவே அவர்கள் இருவரும் இங்கு வந்ததாகத் தெரியவருகிறது.

இலண்டனில் நடைபெற்ற கூட்டங்களில் மக்களை தமக்கு நிதியுதவி செய்யுமாறு வெளிப்படையாகவே கேட்கப் பட்டதனாலும், ரொறொன்ரோவிலும் இலண்டனிலும் நிதி சேகரிப்பதற்காக வென தனியாகக் கட்டணம் அறவிட்டு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதாலும், அவர்களது பயணத்தில் நிதிசேகரிப்பு முக்கிய இடத்தை வகித்தது எனலாம். இருப்பினும்இலண்டனில் நடைபெற்ற கூட்டங்களில் திரு. சம்பந்தன் வெளிப்படுத்திய சில கருத்துகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரட்டை நிலைப்பாட்டை துலாம்பரமாக வெளிக்காட்டுவதாக அமைந்திருந் தமையை அவதானிக்க முடிந்தது.

மக்களுடனான கலந்துரையாடல் என இலண்டனில் நடாத்தப்பட்ட இரண்டு கூட்டங்களிலும், திரு. சம்பந்தன் நீண்ட உரையாற்றினார்.

அவரது உரை சோல்பரி ஆணைக்குழுவிலிருந்து ஆரம்பித்து இன்று வரையான தமிழ் அரசியலின் வரலாறு பற்றியதாக அமைந்திருந்தது.

இருப்பினும் 1976ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானம் பற்றியோ, அத்தீர்மானத்தை தேர்தல் விஞ்ஞாபனமாகக் கொண்டு போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பெருவெற்றியீட்டிய 1977ம் ஆண்டு பொதுத்தேர்தல் பற்றியோ சம்பந்தன் எதுவும் குறிப்பிடவில்லை.

இத்தேர்தலில் வெற்றியீட்டிய திரு. சம்பந்தன் முதற்தடவையாக பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்ற தகவலை மனம்கொள்வோமாயின், ஒரு காலத்தில் தாம் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தமையை மறைப்பதற்காகவே தமிழ் மக்களின் அண்மைய அரசியல்வரலாற்றின் முக்கிய அத்தியாயம் ஒன்றைப் பற்றிக் குறிப்பிடாது தவிர்த்திருந்தமை தெளிவாகும்.

மேற்படி கூட்டங்களில் மக்கள் தமது கருத்தை தெரிவிப்பதற்கென ஒதுக்கப்பட்டிருந்த கேள்வி நேரம் மிகக்குறுகியதாக இருந்தது ஒன்றும் தற்செயலானது அல்ல. மாறாக, மக்கள் மத்தியிலிருந்து எழக்கூடிய சிக்கலான கேள்விகளைத் தவிர்ப்பதற்காகவே இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன எனக் கருத இடமுண்டு.

ஹரோவில் நடைபெற்ற கூட்டத்திற்கு பாதுகாப்பு வழங்க தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்றிலிருந்து பாதுகாப்பு ஊழியர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இதிலிருந்து உள்ளூர் தமிழ் மக்களுக்கும் கூட்டமைப்புக்கும் உள்ள உறவினை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

இரண்டு கூட்டங்களிலும் மக்கள் மத்தியிலிருந்து எழுப்பப்பட்ட கேள்விகள் சமகால அரசியல் நிலவரத்துடன் தொடர்புடையதாக இருந்தன.

ஹரோவில் நடைபெற்ற கூட்டத்தில், எப்போது உங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடப் போகிறீர்கள், அதனை வெளியிடாமல் ஏன் எங்களின் ஆதரவு தேடி வந்தீர்கள் என்ற மிக முக்கியமான இரு கேள்விகளை கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் எழுப்பினார். அதற்கு பதிலளித்த திரு. சம்பந்தன், தமது தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால், தற்போதைய சூழ்நிலையில், கூட்டமைப்பை பொறுத்தவரை, தேர்தல் விஞ்ஞாபனம் போன்ற உத்தியோகபூர்வமான கொள்கை விளக்க அறிக்கையை எழுத்துருவில் தயாரிப்பது என்பது மிகவும் சிக்கலான ஒன்றாகவே அமைந்திருக்கிறது. இக்காரணத்தினாலேயே பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனம் எதனையும் வெளியிடவில்லை.

தெளிவான இலக்கும், அரசியல் கொள்கைகளும் இருப்பின், தமது கொள்கைத் திட்டத்தை வெளியிடுவதில் கூட்டமைப்புக்கு என்ன சிரமமிருக்கக்கூடும்?

இக்கேள்விக்கான பதிலைத் தேடுவதற்கு முன், இதனுடன் தொடர்புபட்ட இன்னொரு கேள்வியை பார்ப்போம். இலண்டனில் வாழும் இளம் தமிழ்ச்செயற்பாட்டாளர் ஒருவர் கூட்டமைப்பின் தேர்தல்விஞ்ஞாபனம் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக அமைந்திருக்குமா?என்ற கேள்வியை இக்கட்டுரையாளரிடம் எழுப்பியிருந்தார். மேலோட்டமாகப் பார்த்தால், இது ஒரு அர்த்தமற்ற கேள்வியாகத் தெரியும். ஏனெனில் மொழிபெயர்ப்பில் ஏற்படும் பிறள்வுகளை தவிர்த்தால், அவை உள்ளடக்கத்தில் இரு வேறுபட்ட ஆவணங்களாக அமைந்திருக்க முடியாது என உறுதியாகக் கூறமுடியும். ஆனால் இக்கேள்வியில் பொதிந்திருக்கிற விடயங்கள் அலட்சியப்படுத்த முடியாதவையாக உள்ளன.

இங்குள்ள அடிப்படைப் பிரச்சனை இதுதான், தமிழ் மக்களுக்கு முன் ஒரு நிலைப்பாட்டையும், வெளித்தரப்புகளுக்கு முன் இன்னொரு நிலைப்பாட்டையும், காட்டவேண்டிய நிலையில் கூட்டமைப்பு உள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் அவர்களது உரிமைக்காகக் குரல்கொடுக்கும் ஒரு தமிழ்த் தேசிய அமைப்பாகவும், வெளித்தரப்பினர் முன்னிலையில், ஐக்கிய இலங்கைக்குள் ஜனநாயக நடைமுறைகளைக் கடைப்பிடிக்கிற ஒரு சிறுபான்மை இனக் குழுமத்தின் கட்சியாகவும் காட்டவேண்டியுள்ளது.

மேற்குலக, மற்றும் இந்தியக் கொள்கை வகுப்பாளர்களின் நிகழ்ச்சி நிரலுக்குள் நின்று கொண்டு, தமிழ் மக்களையும் திருப்பதிப்படுத்துவது இலகுவான விடயமாக அமைந்து விடாது.

கூட்டமைப்பு தமது பாதைக்கு தனது வாக்காளர்கள குழாமை அழைத்துச் செல்வதற்கு நீண்டகாலம் எடுக்கலாம். அல்லது வாக்காளர்கள் கூட்டமைப்பை தமது பாதைக்கு அழைத்துச் செல்லும் முயற்சி தோற்றுப்போய் அவர்கள் கூட்டமைப்பை கைவிடும் நிலை எதிர்காலத்தில் தோன்றலாம்.

ஏனெனில் கூட்டமைப்பு தனது இரட்டைஅணுகுமுறையை நீண்டகாலத்திற்கு கடைப்பிடிக்க முடியாது.

கூட்டமைப்பின் புலம்பெயர் தோழமை அமைப்புகளான



உலகத்தமிழர் பேரவை போன்றவையும் இத்தகைய சிக்கல்களை எதிர்கொள்கின்றன. இருப்பினும் ஜனநாயக அமைப்புகள் என்று கூறிக்கொள்ளும் இவ்வமைப்புகளுக்கு மக்கள் முன்சென்று கொள்கை விளக்கம் செய்து தேர்தலில் நிற்கவேண்டிய வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

நாடுகடந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றவர்கள் தேர்தலில் நின்று மக்கள் ஆதரவை பெறவேண்டியவர்களாக உள்ளமையினால், அவர்களில் சிலர் கூட்டமைப்பின் கொள்கைகளுடன் ஒத்துப்போகிறவர்களாகவும், மறுபுறத்தில் தமிழீழக் கொள்கையை வலியுறுத்துபவர்களாகவும் இரட்டை நிலைப்பாட்டைக் காட்டுவதனை அவதானிக்க முடிகிறது.

இவ்விடயத்தில் கூட்மைப்பு எதிர்நோக்குகின்ற சிக்கல்களை மேற்குலகமும், இந்தியாவும் விளங்கிக்கொள்கின்றன.

தமிழ்த் தேசிய அரசியல் அமைப்புகள் என தமிழ் மக்களுக்கு போக்கு காட்டுகிற கூட்டமைப்பு உடனடியாகவே முழுமையான மாற்றத்திற்கு உள்ளாவதற்கு கால அவகாசம் தேவைப்படும் என்பதனை இத்தரப்புகள் ஏற்றுக்கொள்ளும். இருப்பினும் காலக்கிரமத்தில் தமிழ் மக்களை கூட்டமைப்பு தமது வழிக்குள் கொண்டுவந்துவிடும் என்பதில் அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் போல் தெரிகிறது.

கொழும்பு மேட்டிமை வர்க்கத்து ''தாராண்மைவாத'' அலகுகளைத் திருப்பதிப் படுத்துவதற்காக கூட்டமைப்பு செய்கிற காரியங்களே தமிழ் மக்களை கலவரப்படுத்துகிறது. இதனால்தான் மேற்படி தரப்பினருக்காக ஆங்கிலத்தில் தெரிவிப்பதனை, தமிழ் மக்களை கருத்திற்கொண்டு தமிழில் மாற்றித் தெரிவிக்க வேண்டியுள்ளது. விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள், அவர்களது அழிவிற்கு அவர்களது நடவடிக்கைகளே காரணம் என பாராளுமன்றத்தில் உரையாற்றிய சம்பந்தன், இலண்டனில் வைத்து விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்ல விடுதலைப் போராளிகள் என்று குறிப்பிடுகிறார். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல் முடிவெடுக்கிற சம்பந்தன், நாடுகடந்த அரசாங்கம் உட்பட புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடனான இணைந்து கூட்டாக முடிவெடுக்க விரும்புவதாகத் தெரிவிக்கிறார்.

கூட்டமைப்பின் இந்த அணுகுமுறை கொழும்பில் அவர்களுக்கு நண்பர்களைத் தேடிக் கொடுத்திருக்கிறது. ஆதலால் வடக்கு மாகாணசபையில் கூட்டமைப்பு வெல்லவேண்டும் எனச் சில சிங்களத்தேசியவாதிகள் கட்டுரை வரைகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை தமிழ்த் தேசிய அரசியலைச் சிதைப்பதில் கூட்டமைப்பு தங்களுக்கு பங்காளிகளாகச் செயற்படுகிறது என நம்புகிறார்கள்

இந்த நம்பிக்கையை வளர்த்ததில் சுமந்திரனுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவு செய்தமை மூலம் இந்த நம்பிக்கை மேலும் வலுப்பட்டிருக்கிறது.

கூட்டமைப்பின் இந்த ஏமாற்று நடவடிக்கைக்கு, அதன் புலம்பெயர் எடுபிடிகள் இராஜதந்திரம் எனபுதிய வியாக்கியானம் கொடுக்கலாம், ஆனால் தமிழ் மக்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர் இதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதனை காலம் அவர்களுக்கு உணர்த்தும் என நம்பலாம்.



**-கோபி-**

**தமிழ்த் தேசயிக் கூட்டமைப்பின் மீதான விமர்சனப் பார்வையைக் கொண்ட புலம்பெயர் கட்டுரையொன்று இவ்வாரம் வெளியாகின்றது**

**-நன்றி ஒரு பேப்பர் -**
**[இணையம்]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமுரசு

## ஒலுவில் துறைமுக அங்குரார்ப்பணப் படங்கள்

(மீனோடைக்கட்டு பைஷல் இஸ்மைல்)







## வட மாகாணத் தமிழ் இலக்கியப்பெரு விழா 2013

(குணபாலா)

கலை. இலக்கியவாதிகளை ஊக்குவிக்கும் நோக்கில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடா வருடம் தமிழ் இலக்கியப்பெரு விழாவை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது .இந்த வகையில் 2013ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியப்பெரு விழா இம் மாதம் 01ஆம் 02ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை .வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

காலையில் நடைபெற்ற ஆய்வரங்கம் "இலங்கைத் தமிழ் இலக்கியத்தினூடாக மொழித் திறனும் இலக்கியப் பயில்வும்" எனும் தலைப்பில் நகர்த்தப்பட்டது. மாலையில் பாரம்பரிய மண்வாசனைமிகு இசை நாடகங்கள் ,நடன நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. .நிறைவு நாளன்று தண்ணீரூற்று றோ.க..தமிழ் கலவன் பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமாகிய பண்பாட்டுப்பேரணியில் தமிழர்தம் பண்பாட்டு அம்சங்களை பிரதிபலிக்கும் விடயங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தத்தம் துறைகளில் முத்திரை பதித்த 20 கலைஞர்களுக்கு வடமாகாணத்தின் உயரிய விருதாகிய "கெளரவ ஆளுநர் விருதும்" . ஆக்ககர்த்தாக்கள் 09 பேருக்கு சிறந்த நூற்பரிசும் வழங்கப்பட்டது .இவ் விழாவுக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்தும் கலை இலக்கியவாதிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## அஞ்சலி முயற்சியால் அவஸ்தைப்படும் நவி பிள்ளை

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அண்மையில் மேற்கொண்ட இலங்கை விஜயத்தின் போது, விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தத் திட்டமிட்டிருந்தார் என்று வெளியான செய்திகள் "திரிபுபடுத்தப்பட்டவை" என்று அவரது அலுவலகம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நவநீதம்பிள்ளை, இறுதிக்கட்டப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் உயிரிழந்தவர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்த திட்டமிட்டிருந்தார் என்று ஊடங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இது குறித்து வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அண்மையில் இலண்டினில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தச் செய்திகள் தவறானவை என்று பி.பி.சி.யிடம் தெரிவித்துள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் பேச்சாளர்களில் ஒருவரான 'ரூபர்ட் கோல்வில், "மனித உரிமைகள் ஆணையாளர் இது போன்று மோதல் நடந்து முடிந்து இயல்பு நிலைக்கு வரும் நாடுகளுக்கு செல்லும்போதெல்லாம் அந்த மோதல்களில் உயிரிழந்த அனைத்து தரப்பு மக்களுக்கும் தனது அஞ்சலியை செலுத்துவது வழக்கம்.

"இந்த அஞ்சலி என்பது போரில் கொல்லப்பட்ட அனைத்து மக்களுக்கு மானது. இந்த நிகழ்வின்போது நவீபிள்ளை பயன்படுத்தத் திட்டமிட்டிருந்த வாசகங்கள் அவரது விஜயத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டன" என்றும் கோல்வில் கூறினார்.

"நாங்கள் இது போன்ற ஒரு அஞ்சலி நிகழ்வைச் செய்ய பரீசிலித்து வருகிறோம் என்பதை அறிந்த இலங்கை அரசு, "இதை தாங்கள் வேறு விதமாகத்தான் பார்க்கிறோம்" என்பதைத் தெளிவுபடுத்தி விட்டனர்.

"இந்தச் சம்பவமே நடக்கவில்லை என்ற நிலையில், இது குறித்து அதிகமான அளவில் சலசலப்பு ஏற்படுத்தப்படுவது ஆச்சரியத்தைத் தருகிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நவீபிள்ளை அஞ்சலி செலுத்த திட்டமிட்டிருந்தார் என்று பாவனை செய்வது மிகவும் பாரிய திரிபு நடவடிக்கையாகும். விடுதலைப் புலிகள் இயக்கம் குறித்த நவீபிள்ளையின் கருத்துக்கள் ஏற்கனவே எல்லோருக்கும் தெரிந்தவைதான்" என்றும் அவர் மேலும் கூறினார்.

## எத்தனை காலம் தான்.............?

## ...நாட்டு நடப்பு ...

அனேகமான தங்க ஆபரணங்களில் அளவு கடந்த ஆசை கொண்டவர்கள் எமது தங்கையர்களே ஆனால் இன்று இளைஞர்களும் கூட கழுத்திலும் கையிலும் காதிலும் அவற்றை அணிவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தங்க ஆபரணங்களை அணியாவிட்டால் சமுகத்தில் அந்தஸ்த்து கிடைக்காது என பலர் கருதுகின்றனர். அதனால் அவை தங்களிடம் இல்லா விட்டாலும் இரவலாக பெற்றாவது அணிவதில் முன்நிற்கின்றனர்.

சில பெண்கள் தங்களுக்குள்ள பெரும் வசதி வாய்ப்பை வெளிக்கொணர்வு செய்வதற்காக அம்மனுக்கு பட்டு சாத்துவது போன்று கழுத்து, காது, கை, மூக்கு போன்ற அவயங்களை காற்று புகாவண்ணம் தங்கத்தினால் அலங்கரித்து தங்கம் போன்று பண்டிகைக் காலங்களில் வலம் வருவதை நாம் என்ன காணாமலா.... இருக்கிறோம்.

அது ஒரு பின்தங்கிய கிராமம் சிலர் அங்கு வசதியாக வாழ்வதுடன் பலர் அடிப்படை வசதியற்றும் வாழ்ந்து வருகின்றனர்.

அன்று நகரில் உள்ள காளிகோயில் திருவிழா மிக கோலாகாலமாக இடம் கொற்றுக்கொண்டிருந்தது. நகரைச் சுற்றியுள்ள அயல் கிராமங்கள் திருவிழாவில் தவறாது கலந்து கொள்வது வழமை.

அந்த கிராமத்து பொண்ணொருவர் யாதும் விழாக்கள், வைபவங்கள் ஆகியவற்றுக்கு செல்லும் போது பக்கத்து வீட்டு மாமியிடமே தங்கச் சங்கிலி ஒன்றை இரவலாக வேண்டி அணிந்து சென்று, மீண்டும் வீடு சேர்ந்ததும் அதை திருப்பிக் கொடுப்பது வழமைை. அவ்வாறே அன்று காளி கோயில் திருவிழாவிற்கு செல்வதற்காக மாமியிடம் தங்கச் சங்கிலியை இரவலாக வேண்டி அணிந்து கொண்டு சென்றார் அப்பெண், இரண்டு நாட்கள் கடந்தும் அந்தப் பெண் இரவல் சங்கிலியை மாமியிடம் திருப்பிக் கொடுக்காததினால் மாமி அந்த பெண்ணின் வீட்டுப் படலைக்கே, அதை வேண்ட வந்துவிட்டார்.

" மாமி குறை நினைக்காதேங்க, நாளைக்கு ஒரு கலியாண வீட்டிற்குப் போகவேணும், அவ பொயிட்டு வந்ததும் சங்கிலியை நானே கொண்டு வந்து தாரன், நீங்கள் வரவேணாம்." என்றார் அந்த பெண்.

அடுத்தநாள் பின்னேரம், கூறிய பிரகாரம் மாமியிடம் தங்கச் சங்கிலி சேர்பிக்கப்பட்டது. மாமி ஆரம்பத்தில் சற்று அதிர்ந்து போனார் ஆனால் சங்கிலி கைக்கு கிடைத்ததும் மனதை ஒருவாறு தே[illegible] மூன்று [illegible] கட்டணம் தொடர்ந்து செலுத்தாததினால், மாமியின் மின்சார இணைப்பை துண்டிப்பதற்காக மின்சார சபை ஊழியர்கள் மாமியின் படலையை தட்டினார்கள்.

மாமி தளர்ந்து போய் "தம்பிமாரே சவூதியில இருக்கிற மகன் இன்னமும் காசு அனுப்பவில்லை, நான் எப்படியும் அடுத்த கிழமை முழுப்பணத்தையும் கட்டிப் போடுவன், எனக்கு கொஞ்சம் ரைம் தாங்கோ"என்று கெஞ்சினார் மாமி.

ஆனால் ஊழியர்கள் மாமிக்கு ஒரு நாள் தவணை மட்டும் கொடுத்து விட்டுச் சென்றார்கள். இப்பொழுது மின்சார நிலுவைப்பணத்தை வசூலித்துக் கொடுப்பவர்கள் தனியார் ஒரு நிறுவனம் என்பதால் எவருமே சாக்கு போக்கு கூறமுடியாது. வசூலிக்கும் பணத்திற்கேற்ப கமிஷன் இவர்களுக்கு கிடைப்பதால் இந்த விடயத்தில் அவர்களிடம் அனுதாபத்தை எதிர்பார்க்க முடியாது.

அன்று வாரத்தின் இறுதி நாள் என்பதால் மாமி வழமையாக எவருக்கும் இரவல் கொடுக்கும் தங்கச் சங்கிலியை எடுத்துக் கொண்டு அடகு வைப்பதற்குச் சென்றார்.

வாடிக்கையாளர்களில் எண்ணிக்கை அன்று மிகவும் அ[illegible]து. எப்படியோ மாமி [illegible]ள் போய்விட்டார்.

" அம்மாவுக்கு எவ்வளவு வேணும் ? " " பத்தாயிரம்" " கொஞ்சம் பொறுங்கோ" என்று கூறிக்கொண்டு மாமியின் தங்கச் சங்கிலியின் எடை, தரம், என்பவற்றை பார்ப்பதற்கான குறித்த இயந்திரத்தின் தட்டின் மேல் அதை வைத்தார் வங்கி உத்தியோகத்தர். சற்று நேரத்தின் பின் " அம்மா இதுக்கு பத்து ரூபா கூடத் தரமுடியாதே" என்றார் உத்தியோகத்தர். " என்ன தம்பி சொல்லுறீங்க இந்த சங்கிலியை பல தடவை இங்கதானே அடகு வைக்கிறனான். " " உண்மைதான் அம்மா ஆனால் அந்த சங்கிலி அல்ல இந்த சங்கிலி".

மாமியால் அவ்விடத்தில் ஒன்றுமே பேசமுடியவில்லை சங்கிலியை வேண்டிக்கொண்டு நேரடியாக பொலிசிற்குச் சென்று முறைப்பாடு செய்தார் அன்று பின்னேரம் விசாரணை நடைபெற்றது. " காளி ஆச்சியன் மேல் சத்தியம், எனக்கு ஒன்றுமே தெரியாது" என்றார். சங்கிலியை இரவலாக வேண்டிப்போன பெண். மேலதிக விசாரணைக்காக முறைப்பாடு இணக்க சபைக்கு முன்நிலைப் படுத்தப்பட்டது. தீர்ப்பு கிடைக்கு முன் மாமியின் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டது.

தங்கச் சங்கிலியை கவரிங் (போலி) சங்கிலியாக மாற்றியது குறித்த பெண்ணா? அல்லது அவரின் குடும்பத்தை சாந்தவர்களா? என்பது இன்னும் மர்மமாகவேயுள்ளது.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை

# உதிர்ந்து போன உறவு

காலை 5.00 மணி ஆகிவிட்டதை அம்மன் கோவில் மணியோசை அறிவித்தது. இரவு முழுவதும் நித்திரை வராமல் தவித்துக்கொண்டிருந்த ரகுநாத், பதறித்துடித்து எழுந்தான். இன்று அவன் பல்கலைக்கழகம் செல்ல இருக்கின்றான். ஆவலும், ஆனந்தமும் ஒன்றாய் அவனை உச்சக்கட்ட உணர்வுகளை தூண்டிவிட உடலுக்குள் படபடப்பை பிறப்பித்துக் கொண்டது உள்ளுக்குள் சுரந்த ஓமோன்கள். அதனால்தான் அவனது இரவு உறக்கம் முழுமைபெறாமல் நின்றது. படுக்கையை ஓரமாய் ஓதுக்கிவிட்டு எழுந்தான். அவனை பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதில் அவன் குடும்பமும் ஒன்றாய் குதூகளித்தது.

சமயலறையில் ரகுநாத்தின் தாய் தங்கம் விதம் விதமாய் சமைக்க முயற்சி செய்து கொண்டு இருந்தாள். அவன் தந்தை விஸ்வநாதன் புது உடைகளை பையினுள் அடுக்கிக் கொண்டிருந்தார். அவை நேற்று சவற்கார தண்ணீரில் மூழ்கியதனால்தான் புதிதாக மாறி இருந்தன. புடவைக்கடையில் இருந்து வாங்கி பலகாலம் தான். அவன் தங்கை ரஞ்சிதா தாயாரிற்கு உதவிசெய்வதாய் குறைத்தூக்கத்தில் எழும்பியவள் தூங்கி வழிந்து கொண்டு இருந்தாள். எல்லாவற்றையும் வேகமாய் கண்களால் அளந்துவிட்டு தோழில் துண்டையும் கையில் பற்பொடியுமாய் கிணற்றடிக்குச் சென்றான். வேகமாய் பல்துலக்கி, குளித்துவிட்டு விரைந்து தயார் ஆனான் 6.30 மணி பஸ்சிற்கு.

ரகுநாத்தின் குடும்பம் நடுத்தர வர்க்கம் தான். வீட்டைச்சுற்றி பயிர்த்தாவரங்களை நட்டு அதை வைத்து சமயலில் விதம்விதமாய் வித்தை காண்பித்துவிடுவதில் கெட்டிக்காறி. விஸ்வநாதன் படித்தது ஐந்து வரைதான். படிப்பிற்கு ஒரு டாட்டா காட்டிவிட்டு நண்பர்களோடு கூத்தடித்து திரிந்து இளமைக்காலத்தை வீண்டித்ததன் பலன், இன்று வயிற்றுப் பிழைப்பிற்காக கிடைக்கும் இடத்தில் கூலி வேலை பார்க்கின்றார். அவன் தங்கை ஒன்றும் புரியாத அப்பாவி என்றுதான் சொல்லவேண்டும். ரகுநாத்திற்கு படிப்பில் அவ்வளவு பிரியம். தன் குடும்பம் படும் கஸ்டத்தினை தினம் தினம் பார்ப்பதன் விளைவாகக் கூட இருக்கலாம். முகாமைத்துவ துறைக்குரிய இறுதி மாணவனிற்கு அடுத்த நிலைதான் கிடைத்தது. ஆனாலும் இன்று அவன் பல்கலைக்கழகம் செல்வது முகாமைத்துவ கற்கைநெறிக்குத் தான். விட்டுக்கொடுக்கும் பண்பு விசித்திரமானதுதான். அப்படியொரு விட்டுக்கொடுப்புத்தான் அவனை, அவன் குடும்பத்தினை இன்று இவ்வளவு சந்தோசப்படுத்துகின்றது.

சௌமியாவும், ரகுநாத்தும் உயர்தரத்தில் ஒரே துறையில் கல்வி பயின்றனர். இருவரும் நல்ல நண்பர்களும் கூட, ஒருவருக்கு ஒருவர் படிப்பில் உறுதுணையாயும் இருந்தார்கள். சௌமியாவின் குடும்பம் வசதி வாய்ப்புக்கள் நிறைந்தது. அவளின் தகப்பனார் நிறைந்த உழைப்பாளி. எத்தனையோ சொத்துக்களை கடின உழைப்பின் பலனால் தேடிக்கொண்டவர். அவள் மட்டும்தான் பிள்ளை அதனால் அவர்களிற்கு இவள் செல்லப்பிள்ளை. வசதிகள் அதிகம் என்பதால் சௌமியா பணக்காறத் திமிர் பிடித்தவள் இல்லை, மாறாய் மிகுந்த அமைதியும், அழகும், அறிவும் நிறைந்தவள். அழகாய் உடை உடுத்துவாள், அதில் ஆடம்பரம் கொஞ்சமும் இருக்காது. நாகரிகமாய் நடந்து கொள்ளுவாள், அளவாய் பேசுவாள், பிடித்தவர்களிற்காய் விட்டுக்கொடுப்பாள், மற்றவர்க்கு உதவி செய்வாள். அவளின் பேச்சு, செயல் ஒவ்வொன்றும் அர்த்தமுள்ளதாய் இருக்கும். அவளின் நட்பு ரகுநாத்தை பொறுத்தவரை ஒரு வரம். சௌமியா இல்லை என்றாள் அவனிற்கு இந்த கற்கைத்துறை கிடைத்திருக்காது.

மணி 6.00 தாண்டியது, "அண்ணா ஆறு மணி ஆகிட்டுது. பஸ் இப்ப வெளிக்கிட்டிருக்கும். கெதியன்டு வெளிக்கிடன்" என அவன் தங்கை கூறினாள்.

"ஓம் தம்பி நேரம் போகுது இந்தா இந்த சாப்பாட்ட பாக்கிக்க வை. அத மத்தியானம் சாப்பிடு, இத காலையில சாப்பிடு" என அவன் தாயார் சாப்பாட்டை கொடுக்க,

"இந்தாப்பு இந்த காச செலவுக்கு வைச்சுக்கொள்" என அவன் தகப்பனார் 2000 ரூபாய் கொடுத்தார். பணத்தை வாங்கி பாக்கட்டில் வைத்துக்கொண்டு, பைகளை எடுத்துக்கொண்டு புறப்பட தயார் ஆனான்.

"சரி அம்மா, அப்பா நான் வெளிக்கிடப்போறன். ரஞ்சி நான் பொயிற்று வாரன் நல்லாப் படி என. நான் போய் சேர்ந்ததும் அங்க எங்கயும் பூத்தில இருந்து போன் பண்ணிச் சொல்லுறன். சரி அப்ப நான் பொயிற்றுவாரன்" என அவர்களிடம் இருந்து விடைபெற்றுகொண்டு புறப்பட்டான்.

மறுபுறம் அதே பல்கலைக்கழகத்திற்கு ஆர்ப்பாட்டம் சற்றும் இன்றி தயார் ஆனாள் சௌமியா. அவள் தகப்பனார், "சௌமியா நேரம் போகுது வெளிக்கிடாச்சோ. அம்மா ரெடியாகிட்டாவா என்டு பாருங்கோ. கண்ணயா நாங்கள் எப்பிடியும் மகள கம்பசில விட்டிட்டு இரவைக்குள்ள வந்திடுவம். நீ வீட்டயே நிண்டுக்கொள். வெளிய எங்கயும் போயிடாத, விளங்குதோ?. சரி சரி, வெளிக்கிடுங்கோ." என அனைவரையும் சற்று அதிகாரமாகவே அதட்டிக்கொண்டு காரை தயார் நிலைக்கு கொண்டு வந்தார். மூவரும் காரில் ஏறிக்கொள்ள காரின் சாரதி தன் பணியை ஆரம்பித்தான்.

மிதமான வேகத்தில் கார் பயனிக்கின்றது. கூடவே இதமான சினிமாப் பாடல்கள் இனிமையை அள்ளி வீசிக்கொண்டே.

மணி 6.30 ஐ அடைகின்றது பஸ் வரவும் சரியாக இருந்தது. ரகுநாத்துடன் அவன் ஊரில் இருந்து இன்னும் சிலரும் அதே பல்கலைக்கழகத்திற்கு செல்வதனால், அவர்களும் அதே பஸ்சில் ஏறிக்கொண்டனர். யன்னலோரமாய் அமர்ந்து கொண்டான் பைகளை தன் பக்கத்திலே பாதுகாப்புக்காய் வைத்துக்கொண்டான். மெல்ல நகரும் வண்டின் இதத்தில் சுகமான தூக்கம் வந்தாலும். புதிய பயணத்தின் ஆர்வமும், சேரப்போகும் இடத்தின் கற்பனைகளும் அவன் தூக்கத்தினை கலைத்துக்கொண்டே இருந்தது. ஆனாலும் அவனின் மனக்கண்ணில் வந்த அன்றய நாளினை அவனால் மறக்கமுடியவில்லை. சௌமியாவில் தியாகத்திற்கு என்ன கைமாறு இவனால் செய்யமுடியும். பரபரப்பாய் இருக்கிறது தெருமுனையின் தேனீர்க்கடை. "என்ன மச்சான் றிசல்ஸ் அவுட்டாமடா. எங்கட பள்ளிக்கூடத்தில மூண்டு பேருக்கு கம்பஸ் கிடைச்சிருக்காமடா"

"ஓமடா மாப்பிள்ள. அதில இவன் ரகுவுக்கும், அவள் சௌமிக்கும் கிடைச்சிருக்காமடா"

"அவங்கள் நல்லா படிச்சவங்களடா. நாங்கள் எங்கயடா படிச்சது. இப்ப கவலையா இருக்கடா" "ஓமடா பிழவிட்டிட்டம்" என அவர்கள் ஆதங்கங்களை ஒருவர்கொருவர் ஒப்புவித்துக் கொண்டிருந்தனர். தொலைவில் நின்ற ரகுநாத் புரிந்து கொண்டான். பாடசாலைக்கு விரைந்தான். தனது பெறுபேற்றை உறுதிப்படுத்திக்கொண்டான். அவனது மாவட்ட நிலை அவனை கவலையில் ஆழ்த்தியது. அதே கணம் சௌமியாவும் அங்கே நின்றிருந்தாள். ரகுநாத்தின் முகத்தின் வாட்டத்தினையும் அவன் மனநிலையையும் புரிந்துகொண்டாள். அவன் கனவு, ஏக்கம் என்னவென்பதும் அவளுக்குத் தெரியும். அவன் அருகே சென்ற சௌமியா, "வாழ்த்துக்கள் ரகு" என கையை அவன் முன் நீட்டினாள். பதிலுக்கு ரகுநாத் அமைதியாய் நின்றான். இதழ்கள் புன்னகைக்கவில்லை பதிலுக்கு பொங்கிங்கொண்டிருந்தது புலம்புவதற்கு. அவன் அமைதியை குலைத்து மீண்டும் தொடர்ந்தாள் சௌமியா, "ரகு கவலைப்படாதைங்க உங்களிற்கு மனேஜ்மன்ட் கோஸ் கிடைக்கும்"

"எப்பிடி சௌமி கிடைக்கும். என்னோட ரங் பின்னுக்கே. உங்களிற்கு கிடைக்கும் ஆனா எனக்கு கிடைக்காது" "நான சொல்லுறனெல்லோ உங்களிற்கு கிடைக்கும்" என உறுதி பட சொன்னாள். அவனால் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் மனதை திருப்திப் படுத்திக்கொண்டான். பல மாதங்களின் பின் விண்ணப்பங்களின் முடிவுகளின் படி வெட்டுப்புள்ளிகள் வெளியானது. முகாமைத்துவத்திற்கான வெட்டுப்புள்ளி ரகுநாத்தின் புள்ளியாக இருந்தது. அவனிற்கு ஆச்சரியம் ஒருபுறம், மறுபுறம் சௌமியாவின் வாக்கு பலித்து விட்ட ஆனாந்தம். உடனடியாய் அவளை நேரில் பார்த்து நன்றி சொன்னான். அவளின் நல்ல உள்ளத்தில் பிறந்த வார்த்தை பலித்துவிட்டதிற்காய்.

சில நாட்களின் பின் பல்கலைக்கழக அனுமதிக்கடிதம் வருகின்றது. கூடவே ஆச்சரியமும் காத்திருந்தது அவனிற்கு. சௌமியாவிற்கு முகாமைத்துவம் கிடைக்கவில்லை. தனக்கு முன்னுக்கு அவளிற்கு புள்ளி இருந்தும் ஏன் கிடைக்கவில்லை என்பது ஆச்சரியத்தை அவனுக்கு ஏற்படுத்தியது. இது தொடர்பாக யாருக்கும் விளக்கம் தெரியாது என்பதால் இவ்விடயம் பரபரப்பை ஏற்படுத்தவில்லை. சௌமியாவுக்கு மட்டும்தான் உண்மை தெரியும். அவளும் யாரிடமும் சொல்லமாட்டாள், ஏன் ரகுநாத்திற்கே சொல்லமாட்டாள். ஆனாலும் ரகுநாத்திற்கு குழப்பமாகத்தான் இருந்தது.

சில நாட்களின் பின் பல்கலைக்கழக பதிவுகளை தபாலில் அனுப்பிவிட்டு வரும் போது, "தம்பி இப்பிடி பின்னால வாரவங்கள முன்னுக்கு விட்டா, நான் பின்னுக்கே போறதோ" என பதிவுத் தபாலிற்கு வரிசையில் நின்ற வயோதிபர் சொன்ன வார்த்தைகள் அவனை கலவரப்படுத்தியது. எழுந்த சந்தேகத்துடன் வேகமாய் விரைந்தான் சௌமியாவினை சந்திக்க. "சௌமி தயவு செய்து உண்மைய சொல்லுங்க. என்னோட நீங்க பழகிறது உண்மையான நட்போட என்டால் உண்மைய சொல்லுங்க. அப்பிடி இல்லையென்டா இனி இந்த போலியான நட்போட என் கூட பழக வேண்டாம்"

"ரகு அப்பிடிச் சொல்லாதைங்கோ. என்ன வேதினப்படுத்தாதைங்கோ. பிளீஸ் உங்கள் மேல எனக்கு ரொம்ப பிரியம். நல்ல நண்பன் நீங்கள். உங்கட வீட்டு நிலைமை, படிப்பில உங்களிற்கு இருக்கிற இலட்சியம் எல்லாம் எனக்கு மட்டும் தான் தெரியும். நான் செய்ததை நானே சொல்லக்கூடாது. ஆனா எதுக்காக நான் செய்தேனோ, அதையே இழக்கிறன் என்டால் நான் உண்மைய சொல்லித்தான் ஆகனும். ரகு நான் மனேஜ்மன்ட் கோஸ் தெரிவு செய்யல்ல தெரியுமா"..... "சௌமி, ஏன் இப்பிடிச் செய்திங்க" "அன்டைக்கு உங்கள பள்ளிக்கூடத்தில பாத்தாப்பிறகு மனமே சரியில்ல ரகு. உங்க மேல நான் வைச்ச அன்பு, நீங்க கவலப்படுறத [illegible] எனக்கு எல்லாமே கிடைச்சிது ரகு. வசதி வாய்ப்பு, பணம், அந்தஸ்த்து எல்லாமே கிடைச்சிது. ஆனா உங்களிற்கு எதுவுமே கிடைக்கல்ல. இந்த கோஸ் கிடைக்கிறதால எனக்கு பெரிய நன்மை கிடைக்கப்போறதில்ல. ஆனா இத நம்பித்தான் உங்க அம்மா, அப்பா, தங்கச்சி ஏன் அடுத்த ஜெனரேசனே இருக்கு. அதான் விட்டுக் கொடுத்திட்டன் ரகு" என சொல்லிக் கொண்டே கண்களை துடைத்துக்கொண்டு மெலிதாய் புன்னகைத்தாள். இப்படியொருவர் இந்தக்காலத்தில் இருக்கமுடியுமா? சந்தேகம் தான். அவளின் செயலில் உறைந்து போய் நின்ற ரகுவிற்கு அவளை அப்படியே கட்டிப்பிடித்து கதறவேண்டும் போல் இருந்தது. அவள் மடியில் தலைசாய்த்து கண்களை மூடி அழவேண்டும் போல் இருந்தது. மறுமுனையில் அவள் ஏன் என்மீது இவ்வளவு பாசம் வைக்கிறாள்? அவள் மீது எனக்கு ஏன் இவ்வளவு ஈர்ப்பு? ஆயிரம் கேள்விகளோடு இவனும், அடுத்து என்ன பேசுவது என அவளும் மௌனமாய் எதிர் எதிரே நின்றனர். யார் மௌனத்தை உடைப்பது? இருவருக்கும் இனம்புரியாத காதல் மலர்ந்தது உண்மைதான். இப்படி நடந்தால்தான் காதல் வரும் என்பது இல்லைதான். ஆனாலும் இனப்புரியாத உணர்வு உண்மையாய் உள்ளுக்குள் உருவாக காரணம் தேவையில்லை அதை சொல்லத்தான் காரணம் தேடுகின்றது மனித மனங்கள். இருமனதில் உருவான அலைகள் ஒன்றாகி நிற்கின்றது வார்த்தைகள் இன்றி மௌனமாய். தான் செய்த தியாகம் இந்த காதலுக்காக என அவன் எண்ணுவானோ என தயங்குகின்றாள். இவன் அவள் செய்த உதவிக்கு விலை காதல் என்று எண்ணுவாளோ எனத்துடிக்கின்றான். எதிர்பார்ப்பு இன்றி ஓர் உண்மைக் காதல் ஊமையாய் நிற்கின்றது. உணர்வுகள் தேடிய உருவமாய் அங்கே ஒரு பைத்தியகாரன் வந்தான். "ஆ ஆ நடக்கட்டும் நடக்கட்டும். காதல் ஆ காதல்" என தன்பாட்டில் சொல்லிக் கொண்டு போனான். இது அவன் யாரை பார்த்தாலும் சொல்வதுதான். ஆனால் இங்கே பொருத்தமாய் சொல்லிவிட்டதை எண்ணி இருவரும் ஒருங்கே ஒருவரை ஒருவர் நோக்கினர், புன்னகையில் பூரித்தவாறே பைத்தியக்காரனை பாசத்தோடு பார்த்தனர். இதுவரை புன்னகைக்காத பைத்தியக்காரன் பதிலுக்கு புன்னகைத்தான். தலை அசைத்தவாறே வீதி முடிவில் மறைந்தான். புன்னகையின் சாட்சியாக விழிகள் நான்கும் காதலை பரிமாறிக்கொண்டது. பட்டாம் பூச்சிகள் பறக்க இதமாக விலகிச்சென்றனர். இந்த நிமிடங்களை மீட்டி முடிக்க பல்கலைகழக நுளைவாயில் முன்னே பஸ்வண்டி நிற்கவும் சரியாக இருந்தது. இறங்க வேண்டியவர்கள் ஒவ்வொருவராய் இறங்கிக்கொண்டனர். இவர்களை எதிர்பாத்து காத்து நின்றனர் இவர்களின் மூத்த சகாக்கள். பல்கலைக்கழகத்தில் சுவாரசியம் நிறைந்ததே பகிடிவதை தான். சௌமியா காரில் வந்ததால் நேரடியாய் விடுதிக்கு சென்றுவிட்டாள். ஆனால் இவர்கள் மாட்டிக்கொண்டார்கள்.

மறுநாள் காலை முதல் வகுப்பிற்கு மாணவர்கள் நிரையாய் சென்று கொண்டிருந்தார்கள். இடையிடையே சீனியர்கள் யூனியர்களை செல்லமாய் வதைத்துக் கொண்டிருந்தனர். பரபரப்பான நிமிடங்களாய் கழிந்தது சில நாட்கள். பகிடிவதை சற்று கலவரப்படுத்தியதால் ரகுவால் சௌமியவுடன் சரியாக பேசமுடியவில்லை. அது அவனை கொஞ்சம் சங்கடப்படுத்தினாலும் கொஞ்ச நாட்களிற்கு தானே என பொறுத்துக் கொண்டான். பகிடிவதை முடிந்து சகஜமாய் படிப்புக்கள் தொடங்க ரகுவும், சௌமியாவும் ஒன்றாக செல்ல ஆரம்பித்தனர். சொல்லாதகாதலை தங்களுக்குள் தனித்தனியாய் அனுபவித்தனர். ரகுவின் மீது அதிக அன்பு வைத்திருந்தாள் சௌமியா. அவனிற்கு தேவையான அனைத்தும் அவளால் நிறைவேறியது. அவன் படிப்பிற்கான செலவை சௌமியா தான் செய்தாள். தனக்கு என வீட்டில் பணம் வாங்கி அவனுக்குக் கொடுப்பாள். வாங்குவதற்கு சங்கடமாக இருந்தாலும் அவளின் அன்பை இழந்துவிட முடியாது என்பதற்காய் அவள் கொடுக்கும் எதையும் மறுக்கமாட்டான் ரகு. வெவ்வேறு பீடங்களாக இருந்தாலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் சந்தித்து பேசிக்கொள்வார்கள். விட்டுக்கொடுப்புக்கள், புரிந்துணர்வுகள் பலமாய் நின்றது அவர்கள் காதலிற்கு நாட்கள் கடந்தது ஆண்டுகள் முடிந்தது இறுதிப் பரீட்சையும் முடிந்தது. இனி அவரவர் வீடுகளிற்கு செல்லவதும், வேலை தேடுவதுவும் தான் மீதமாய் உள்ளது. இருவரும் ஒரே ஊரில் இருந்தாலும் ஒருவருக்கு ஒருவர் அடிக்கடி சந்தித்துக் கொள்ள முடியாது. இன்னமும் காதலை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் முதியவர் மத்தியில் வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். கடந்த காலத்து அநாகரிக நபர்களின் பொறுப்பற்ற செயலால் கொச்சைப்படுத்தப்பட காதல் அவர்கள் மனதில் கசப்பாய் மாறிவிட்டது போலும். ரகுநாத் தொடர்ந்து வேலைக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தான். அதன் பலன் அவனிற்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் வர ஆரம்பித்தது. [illegible] நல்லதோர் கம்பனியில் வேலைகிடைத்தது. ஆனால் சௌமியா வெளியில் வேலை தேடவில்லை. அவள் தகப்பனாரிற்கு உதவியாய் அவரின் வியாபாரங்களின் முகாமைத்துவத்தினை கவனித்துக் கொண்டாள்.

ரகுவிற்கு வேலைகிடைத்த விடயம் அறிந்து அவனை சந்தித்து வாழ்த்தி வழி அனுப்பிவைத்தாள். ரகு புதிய நிறுவனத்தில் பணியை பொறுப்பேற்க செல்கின்றான். உயர்ந்து வளர்ந்த கட்டிடம். நுளைவாயிலில் காவலாளியிடம் கடிதத்தினை காட்டி உள் நுளைகின்றான். கண்ணாடி அறையினுள் ஒரு பளிங்குச் சிலைபோல் அழகிய பெண். காவலாளி சொன்ன தகவளின்படி இவன் அவளைத்தான் சந்திக்கவேண்டும். அவள் வேறுயாரும் இல்லை நிறுவன சொந்தக்காரனின் ஒரே வாரிசு சுவேதா. கதவை உள்ளே தள்ளி,

"மே ஐ கம் இன் மெடம்?" என்றான் ரகு. பதிலுக்கு "யெஸ் கம் இன்" என பதில் வர, உள்ளே சென்று சுவேதாவிடம் தன்னை அறிமுகப்படுத்த, அவளும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். தன் பணியை பொறுப்பேற்றுக்கொண்டு தனது இடத்திற்கு வந்து அமர்ந்து கொண்டான். அலுவலக தொலைபேசி ஒன்று அவன் மேசையில் இருந்தது அவன் தேவைக்காக. வரும்போது சௌமியாவின் தொலைபேசி இலக்கம் வாங்கி வந்திருந்தான். எண்களை ஒவ்வொன்றாய் அழுத்தினான். சௌமியாவுடன் தொடர்பு கிடைத்தது தகவலை சொல்லிவிட்டு அன்பாய் பேசிவிட்டு வைத்தான் தொலைபேசியினை. தனது பணியில் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டான். அவனிற்கு நட்டத்தில் இயங்கும் நிறுவனத்தின் பொறுப்பே வழங்கப்பட்டிருந்தது. எனவே வேலை அவனுக்கு சவாலாக இருந்தது. அவனிற்கு எழும் சந்தேகங்களை சௌமியாவிடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்பான் அவளால் சரியாக விளக்கம் கொடுக்கப்படும் என்பதில் அவனுக்கு நூறு வீத நம்பிக்கை. உண்மைதான் அவளின் வழிகாட்டலில் செயற்பட்ட ரகுவால் நட்டத்தில் விழுந்த நிறுவனம் நிமிர ஆரம்பித்தது. இது நிறுவன உரிமையாளரால் கூட நம்ப முடியவில்லை. ரகுவின் திறமையை பாராட்ட ஆரம்பித்தாள் சுவேதா. அவன் செயல்களை ரசிக்க ஆரம்பித்தாள். ரகுவின் வளர்ச்சி வேகமாய் இருந்தது. மறைவில் உதவிய சௌமியாவை அங்கே யாருக்கும் தெரியாது. சௌமியா ரகுவிற்கு நிறைய உதவினாள், அவனை மேலும் பல படிப்புக்கள் படிக்க வைத்தாள் அவன் செலவுகளிற்கும் துணைநின்றாள். ரகுவின் முன்னேற்றத்தால் படிப்படியாக ஒவ்வொரு நிறுவனங்களும் அவன் பொறுப்புக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவை அனைத்தும் சுவேதாவால் அவள் தந்தையிடம் பரிந்துரை செய்யப்பட்டவைதான். சுவேதா ரகுவை நேசிக்க ஆரம்பித்தாள் அதிக நேரம் அவனுடன் செலவழிக்க விரும்பினாள். வேலையின் பரப்பு அதிகமாக பதவி உர்ந்தது கூடவே வசதிகளும் வளர ஆரம்பித்தது. ஓய்வு நேரங்கள் குறைந்துவிட்டது. சௌமியாவுடன் ரகு கதைத்து சில நாட்கள் கடந்து விட்டன. தினம் தொலைபேசி அருகே காத்திருந்தாள். அவன் குரலில் குதுகலம் கொள்ள இந்த இழவு காத்த கிளி. ரகுவின் குடும்பம் அவன் கூடவே சென்றுவிட்டது. சுவேதாவின் தந்தை தன் முழுப்பொறுப்பையும் ரகுவிடம் கொடுப்பது பற்றி யோசித்தார்.

"சுவேதா நீ ரகுவ பத்தி என்ன நினைக்கிறாய்" "ம்.. நல்ல திறமைசாலி. அவர் இல்லை என்டா எங்கட சொத்துக்கள நாங்கள் கொஞ்சக் காலத்தில இழந்திருப்பம். அவர எனக்கு ரொம்ப பிடிச்சிருக்க அப்பா"...... "ம் அதபத்தி தான் பேசுவதற்கு உன்ன கூப்பிட்டனான். உனக்கு ரகுவ பிடிச்சிருந்தால் அவனிட்ட பேசுறன். சீக்கிரம் நல்ல நாளா பாத்து கலியாணத்த முடிச்சிரலாம்"

"ஓகே அப்பா" என முகம்மலர உள்ளே ஓடினாள் சுவேதா. சுவேதாவின் தகப்பனார் ரகுவிடம் நேரடியாகவே கேட்டார். தனக்கு யோசிக்கொஞ்சம் நேரம் வேண்டும் என ரகு சொல்லிவிட்டு சௌமியாவா, அவளிலும் பலமடங்கு பணம் படைந்த சுவேதாவா என யோசிக்க ஆரம்பித்தான். வசதி வாய்ப்புக்கள் அவன் கண்களை மறைத்துவிட்டது. திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அழைப்பு மடல் சௌமியாவுக்கும் அனுப்பியிருந்தான். அவள் பிரித்துப்படிக்கும் போது சுவேத்தவின் கணவனாக மாறி இருந்தான் ரகுநாத். நின்றுவிட்ட இதயம் மீட்டெடுத்து துடித்தாள். என்ன செய்வது தன் நிலை பற்றி யாரிடம் சொல்வாள். அவள் விரும்பி வணங்கும் முருகனிடம் கேட்டாள், "நான் என்ன பாவம் செய்தன்? எனக்கேன் இவ்வளவு பெரிய தண்டனை? என கோபமாய் பொங்கினாள். வாய்பொத்தி அழுதாள், கன்னங்கள் சிவந்தது கண்ணீரின் பாரத்தால். பொறுமையாய் யோசித்தாள் முடிந்து விட்ட நிமிடங்கள், தந்துவிட்ட வலிகள் மரணத்திலும் கொடுமை. இறந்துவிட்டேன் ஒருதடவை நடைபிணமாய் நாட்கள் கழியட்டும். என சோகங்களை சுகமாக்கிக்கொண்டு இனிமையான அவள் ஒருபக்க காதலை ரசித்துக்கொண்டு வாழ ஆரம்பித்தாள். ஆணும் பெண்ணும் சேர்வதுதான் வாழ்க்கை இல்லை. சேர முடியாதவை சேரமால் வாழ்வதும் வாழ்க்கைதான். சேர்ந்து பிரிவதிலும் சேராமல் பிரிவது மேல்.

(இ.கேதீஸ்வரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பேனா முனை பேசுகிறது .......

ஆதங்கம் இல்லாமல் அவசரமாய்
பேசுகிறேன்......
ஆக்கிரமிப்பு இல்லாமல் அவசியமாய்
பேசுகிறேன்......
திடுக்கிடும் தகவல்களையும் திருப்பி
விடும் என் நுனி விரலில்
சிக்கித்தவிக்கும் திருப்புமுனை நண்பன்
நான் பேனாமுனை பேசுகிறேன்.

தொடர் வாரமாய் தொடர்ந்துவரும்
செந்தமிழ் இதழ்
மலைமுரசுக்கு முதல் மரியாதை.......
மலைமுரசின் வாசகர்களுக்கு
அடுத்து வரும் என் மரியாதை.........
மலைமுரசை பிரசுரிக்க பிரிதவிக்கும்
ஆசான்களுக்கு என் மலர்
மனமாலையை மலர்கிறேன்.........
இவ் ஊரின் மலைமுரசின்
பத்திரிகையாளர் பர்ஹாத்தினைப்
பாராட்டுகிறேன்..
நான் பேனா முனை பேசுகிறேன்.

அட்டாளை ஊரிலிருந்து நான்
பேனாமுனை பேசுகிறேன்........
அக் - அல் முனீரா கல்லூரியை மனம்
மகிழ்ந்து பேசுகிறேன்........
என் கல்லூரித்தாயின் தாகம் தணிக்கும்
ஆசான்களை பாராட்டுகிறேன்............
கல்வித்தாகத்தோடு காத்திருக்கும்
என் நண்பிகளை வரவேற்குகிறேன்......
நான்தான் அட்டாளை ஊரின்
பேனாமுனை நாஜாபானு பேசுகிறேன்.
என் ஆக்கத்தையும் இணைத்தமைக்கு
மலைமுரசுக்கு நன்றி நவில்கிறேன்
நான் பேனாமுனை பேசுகிறேன்............

மீண்டும் சந்திக்கும் வரை நான்
உங்கள் பேனாமுனை
நஜாபானு...................................

B. நஜாபானு
தரம்-7A
அக் / அல் முனீறா பெண்கள் உயர் தர
பாடசாலை
அட்டாளைச்சேனை.

### இளமை



இன்று வந்ததல்ல இந்த இளமை
இது பிஞ்சு தொட்டு வந்த
இளமை.......
சிப்பிக்குள் இருக்கும் முத்துக்கள்
போன்ற இளமை....
முத்து வெளிவந்தால் கிடைப்பது
போன்ற மகிமை.....
இதுதான் இந்த இளமை.

மூன்று முறை யோசித்துப்பார் புரிந்து
விடும் உன் நிலமை....
அன்றுதான் கிடைக்கும் உன்
உரிமை.....
விண்ணில் பறப்பதும் இளமை.....
முண்ணில் திரிவதும் இளமை....
கண்ணில் படுவதும் இளமை...
என்றும் கண்டுகொள்ளாத இளமை.

வீரன் எனப் பெயரெடுத்த இளமை..
சோக வசனங்கள் பேசிய இளமை..
சுட்ட வெயிலில் எல்லாம் பட்ட
இளமை...
இதுதான் இளமைக்கு வந்த
கொடுமை.

தோழனாய் தோழ் கொடுக்கும்
இளமை...
தெருத்தெருவாய் தோய்ந்து போன
இளமை...
அற்பசொற்பைக்காய் ஆசைப்பபட்ட
இளமை...
என்றுதான் அடங்கும் இப்புதுமை?.

இறைமைக்கு தலை வணங்கு...
என் இளமைக்கு மனம் வழங்கு...
கடைமைக்கு கனம் வழங்கு...
இந்த இளமைக்கு நீ அடங்கு.

இளமைக்கு என்ன புதுமை?....
அதுதான் இந்த இளமை...
ஆச்சரியம் கொள்ளாத இளமை....
அதிசயமான புதுமை...
என்றுதான் அடங்கும் இந்த இளமை?.

மன்னனான இளமை...
மார்பு தட்டும் இளமை....
சொற்பமான இளமை...
இதுதான் இக்காலத்தின் இளமை

இளமைக் கவியரசு:- B.M. பர்ஹாத்



உன்
கரங்களை ஸ்பரிசித்தபடி
தோள் சாய்ந்து நடக்க வேண்டும்
வாழ்க்கையின் ருசிகளை உணர்ந்து
கொள்ள....

ஜே.மதிவதனி

### முத்தம்

உன் கைகள் என் கைகளை
பற்றிக் கொள்ள
உன்மார்போரம் - நான்
சாய்ந்து கொள்ள
உன் கண்கள் மட்டுமல்ல
உன் உதடுகளும்
எனக்கு சொன்னது
அன்பாய் ஒருகவிதை....

அனு அஜி

### போதும் வாழவிடுங்கள்

நானும் மனிதன் தான்
எனக்குள்ளும் கனவுகள்
நிராகரிக்க முடியாத விருப்புகள்
உயிர் பற்றிய பயம்
வாழவேண்டுமென்ற ஆசைகள்
சாதிக்க வேண்டுமென்ற
வெறி தொடர்கதைகளாய்
இன்னும்......இன்னும்
பல்லாயிரம் பகிர்வுகள் உண்டு
போதும் நல்லதொரு சூழலில்
என்னையும் வாழவிடுங்கள்!!

ச.கோபிரமணனி






## வரலாற்றில் தம்பலகாமம் - பாகம் 5 -

திருகோணமலை வரலாற்றில் மன்னர்களின் நேரடி ஆட்சி முறை தளர்ந்த பிற்பாடு நிலமானியமுறை சார்ந்த வன்னியர் ஆட்சி தொடங்கியதெனலாம். இதனைப் பல வரலாற்றுச் சான்றுகள் உறுதி செய்கின்றன.

குளக்கோட்டனின் அரச பிரதானியாகிய தனியுண்ணாப் பூபாலவன்னியர் என்பவர் மூலம் திருகோணமலையில் வன்னியர்களின் ஆட்சி தொடங்கியது என்றாலும் குளக்கோட்டன் காலத்திற்கு முன்னரும், பின்னரும் இங்கு அவை தொடர்ந்திருந்திருக்கிறது எனச்சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் செயதுங்க வீரவரராஜசிங்கன் (கைலாயமாலை கூறும் செயவீரசிங்கை ஆரியன் ) வன்னியர்களை அடங்காப் பற்றுக்குச்சென்று அதைக் கைப்பற்றி ஆளுமாறும், ஆண்டுதோறும் யாழ்ப்பாண அரசனுக்குத் திறை செலுத்த வேண்டுமென்றும் பணித்தான். இவர்களில் மாமுகன் என்னும் வன்னியன் வெருகல், தம்பலகாமம் என்பவற்றைக் கைப்பற்றியாளச் சென்றான் என வையாபாடல் மூலம் அறியக்கிடக்கிறது.(1) இதனைத்தொடர்ந்து வரும் குளக்கோட்டன் காலத்தில் திருகோணமலை மாவட்டம் நாலு பற்றுக்களாக நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.

1.திருகோணமலைப்பற்று.
2.கட்டுக்குளப்பற்று (நிலாவெளி சார்ந்த பிரதேசம்)
3.கொட்டியாரப்பற்று.(மூதூர் சார்ந்த பிரதேசம்)
4.தம்பலகாமப் பற்று என்பன

இவை தனியான சுயாட்சி அலகுகள் என்பதற்கு அவை கொண்டிருந்த நில, நீதி, தண்டனை தொடர்பான அதிகாரங்களே சான்று பகருகின்றன. இவையனைத்தும் திருக்கோணேஸ்வர ஆலயத்திருப்பணிகள் இடையறாது நியமப்படி நடைபெற வேண்டும் என்பதையும், அவ்வேளைகளில் ஆலயப் பணியாளர்கள் ,சாதாரண மக்கள் என்பவர்களுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு இந்த அதிகாரங்கள் பயன்பட வேண்டும் என்பதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தன.(2)

இவ்வன்னிப ஆட்சி 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் திருகோணமலையைக் கைப்பற்றும் வரை தொடந்தது. இதில் திருகோணமலைப் பற்று, கட்டுக்குளப்பற்று, தம்பலகாமப்பற்று ஆகிய மூன்று வன்னிபங்களும் சுதந்திரச் சிற்றரசாகச் செயற்பட கொட்டியாரப்பற்று சிலகாலங்களுக்கு கண்டி அரசின் மேலாண்மையை ஏற்றிருந்தது.

17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போர்த்துக்கீச வரலாற்றாசிரியர் குவைறோஸ் அடிகளார் கீழைத் தேசத்தில் வாழ்கின்ற இந்துக்களின் ரோம் என்று குறிப்பிடும் திருக்கோணேச்சரம் கி.பி 1624 இல் போர்த்துக்கீச தளபதி கொன்ஸ்ரன்டைன் டிசா என்பவனால் கொள்ளையடித்து, இடித்து தரைமட்டமாக்கப்பட்டது.

இந் நிகழ்வு பற்றி முன்னமே அறிந்துகொண்ட அங்கு கடமையாற்றிய பாசுபதர் என்றழைக்கப்பட்ட பூசகர்களும், தொழும்பாளர்களும், பக்தர்களும் இணைந்து இடிபட இருந்த கோயிலுக்குள் இருந்த விக்கிரகங்களை எடுத்து மண்ணில் புதைத்து வைத்தும்,காடுகளிலும்,மலைகளிலும் மறைத்துவைத்தும் வழிபாடு இயற்றி வந்தனர்.

தமது உயிரைப் பணயம் வைத்து மூல விக்கிரகமான கோணேஸ்வரரை இரகசியமாக காடுகள் வழியே எடுத்து வந்து தம்பலகாமம் மேற்கு மலைத்தொடரில் உள்ள கழனி மலைச்சிகரத்தில் வைத்து பூசித்து வந்தனர்.இதனால் இம்மலை சுவாமி மலை என்று அழைக்கப்படுகிறது. !பின்னர் கண்டியில் அரசு செய்த ஜெயதுங்க வரராசசிங்கன் என்னும் மன்னன் சுவாமி மலையில் வைத்து வழிபட்டுவந்த ஆதிகோணநாயகரையும், மாதுமை அம்மையையும் மற்றும் உள்ள பரிவார தெய்வங்களையும் மேளதாளத்துடன் சிறப்புற எடுத்துவந்து தம்பலகாமம் கோயிற் குடியிருப்பு என்னும் இடத்தில் உள்ள கோயிலில் பிரதிஷ்டை செய்தான் என திருக்கோணாசலப் புராணம் கூறுகிறது.

அன்று முதல் தம்பலகாமத்தில் இருந்த சிவாலயம் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயமாக மாற்றம் பெற்றது.

அதேவேளை திருக்கோணேச்சரமும் சைவப் பெருமக்களால் மீண்டும் புதுப்பொலிவுடன் நிர்மாணிக்கப்பட்டு சிறப்பாக வழிபாடியற்றப்பட்டு வருகிறது. போர்த்துக்கீசர் முற்றாக அழிக்க நினைத்த ஆலயம் அழிவில் இருந்து மீண்டெழுந்து திருகோணமயில் திருக்கோணேச்சரமாகவும், தம்பலகாமத்தில் ஆதி கோணநாயகர் ஆலயமாகவும் இரு ஆலயங்களாக பரிணமித்திருக்கும் வரலாறு ஆச்சரியம் தருவதாய் இருக்கிறது .

ஆதாரங்கள்

1. வன்னியர் - பேராசிரியர்.சி.பத்மநாதன்
2.வரலாற்றுத் திருகோணமலை - கனகசபாபதி சரவணபவன் 2003

வைத்திய கலாநிதி த. ஜீவராஜ்

தொடரும்.....

கடந்த வாரம் பதிப்பில் ஏற்பட்ட ஒழுங்கினங்களுக்கு வருந்துகின்றோம். அதனால் பாகம் 5 மீளப் பிரசுரம் ஆகிறது.

ஆ-ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்கடி மும்பைக்கு பறக்கும் அமலாபால்

ரமணா படத்தின் இந்தி ரீமேக்கில் நடிப்பதற்காக அமலாபால் அடிக்கடி மும்பைக்கு பறந்த வண்ணம் இருக்கிறாராம். தமிழில் முருகதாஸ் இயக்கத்தில் விஜயகாந்த் நடிப்பில் வெளிவந்து, சூப்பர் ஹிட்டான ரமணா படத்தை இந்தியில் ரீமேக் செய்ய உள்ளார்கள். இந்த இந்தி படத்தில் கதாநாயகனாக அஜய்குமார் நடிக்கிறார். படத்தை பிரபல இயக்குனர் சஞ்சய் பன்சாலி இயக்குகிறார். படத்திற்கு, கப்பார் என்று பெயர் வைத்துள்ளனர். இப்படத்தில் ஹீரோயினாக நடிக்க ஸ்ருதிஹாசன் அல்லது இலியானாவை தேர்ந்தெடுக்கலாம் என முடிவு செய்திருந்தனர். ஆனால், படத்தின் நாயகி தென்னிந்திய சாயலில் இருக்க வேண்டும் என்பதால், ஸ்ருதியையும் இலியானாவையும் ஓரம் கட்டி விட்டு அமலா பாலை தேர்ந்தெடுத்துள்ளனர். இதற்கான போட்டேடெஸ்ட் மற்றும் டிஸ்கஷன்கள் மும்பையில் நடைபெற்று வருகிறது. இதற்காகத் தான் அம்மணி அடிக்கடி மும்பைக்கு பறந்து வருகிறார்.

## பாடகராக சூர்யா!!




"கொஞ்சும் காலையில் கண்கள் திறந்ததுமே... வாசம் வரவேற்கும் புதிய சன்ரைஸ்..." இந்த பாடலைக் கேட்டதும் சன்ரைஸ் ஞாபகம் வருவதை விட சூர்யாவின் ஞாபகம் தான் வரும். சூர்யாவையும் ஜோதிகாவையும் ஜோடியாக அத்தனை சன்ரைஸ் விளம்பரத்தில் பார்த்திருக்கின்றனர் பொது மக்களும் ரசிகர்களும். பொதுவாக தமிழ்த் திரையுலக நடிகர்களில் முன்னணியில் இருப்பவர்களை ஏதாவது விளம்பரப் படத்தில் நடிக்கவைக்க விளம்பர கம்பெனிகள் போட்டி போடுவார்கள். ஆனால் சூர்யா விடயத்தில் அப்படி இல்லை. தன்னைத் தேடி வந்தவர்களை ஏமாற்றாமல் பல விளம்பரங்களில் நடித்துக் கொடுத்திருக்கிறார் சூர்யா. இத்தகைய குணம் படைத்த சூர்யா இதுவரை திரைப்படங்களுக்குக் கூட செய்யாத ஒரு காரியத்தை சன்ரைஸ் விளம்பரத்திற்காக செய்திருக்கிறார். தமிழ்த் திரையுலக ஹீரோக்கள் பலரும் தங்கள் திரைப்படங்களில்



சொந்தக் குரலிலேயே பாடி நடித்திருக்க, சூர்யா மட்டும் அந்த லிஸ்டில் இடம்பெறாமலே இருந்து வந்தார். ஆனால் இப்பொழுது முதல் முறையாக சன்ரைஸ் விளம்பரத்திற்காக சொந்தக்குரலில் ஒரு பாட்டு பாடியிருக்கிறார் சூர்யா. ராஜீவ் மேனன் உருவாக்கிக்கொண்டிருக்கும் அந்த விளம்பரத்திற்காக முதலில் குறிப்பிட்ட சன்ரைஸின் தீம் சோங்கை தனது சொந்தக் குரலில் பாடிக்கொடுத்திருக்கிறார் சூர்யா.

## மெழுகுச் சிலையான பிரபுதேவா!!

நடிகரும், இயக்குனருமான பிரபுதேவாவின் பொலிவூட் ரசிகர்கள் அவரைப் போன்றே மெழுகுச் சிலையொன்றை உருவாக்கியுள்ளனர். நயன்தாராவை பிரிந்த பிறகு பிரபுதேவா பொலிவூட்டில் தான் அதிக கவனம் செலுத்தி வருகிறார். பொலிவூட்டில் அவரை ரீமேக் மன்னன் என்று புகழாரம் செய்து தலையில் வைத்து கொண்டாடுகிறார்கள்.



இந்நிலையில் பிரபுதேவாவுக்கு அவரது பொலிவூட் ரசிகர்கள் மெழுகுச் சிலையை செய்துள்ளனர். மும்பை – பூனே தேசிய நெடுஞ்சாலையில் உள்ள லோனாவாலா மெழுகுச் சிலை அருங்காட்சியகத்தில் பிரபுதேவாவின் மெழுகுச் சிலை திறப்பு விழா நடந்தது. சிலையை திறந்து வைத்து அதன் அருகில் நின்று பார்த்து அதிசயித்தார் பிரபுதேவா. தன்னை பெருமைப்படுத்திய பொலிவூட் ரசிகர்களுக்கு தன் மனதில் ஸ்பெசல் இடத்தை கொடுத்துள்ளாராம் பிரபுதேவா.

## தலைவாவுக்கு பின் தலையோடு ஜோடி போட ஆசைப்படும் அமலாபால்!

நடிகர் அஜித்துடன் நடிப்பதற்கு ஆசைப்படுவதாக தெரிவித்துள்ளார் நடிகை அமலா பால். தமிழ் சினிமாவில் எந்த நடிகையிடம் கேட்டாலும் ரஜினி, கமலுடன் எப்படியாவது நடிக்க வேண்டும் என்று தான் சொல்வார்கள். அந்த பதில் இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக மாறிவருகிறது. ரஜினி, கமலுக்குப் பதிலாக விஜய், அஜித்தை சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அமலாபாலும் அப்படி ஒரு ஆசையில்தான் இருக்கிறாராம். ரஜினி படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்து விடணும். சான்ஸ் கிடைத்தால் சம்பளமே தேவையில்லை என்று ஆரம்பத்தில் சொல்லி வந்தார் அமலா பால். தலைவாவில் நடித்த பின்பு தல அஜித்துடன் நடிப்பதற்கு ஆர்வம் காட்டுகிறாராம். இதனால் தமிழ் சினிமாவில் நிரந்தரமா ஒரு நல்ல பெயர் கிடைத்துவிடும் என்ற கனவில் இருக்கிறார் அமலாபால்.



# சினிமுரசு

## தீபாவளிக்கு ஆரம்பம் பொங்கலுக்கு வீரம்

நடிகர் அஜீத் குமார் நடித்த ஆரம்பம் திரைப்படம், எதிர்வரும் தீபாவளிக்கும், வீரம் திரைப்படம் பொங்கலுக்கும் வெளியாகும் என்று அறிவித்துள்ளனர்.விஸ்ணுவர்தன் இயக்கத்தில் ஆரம்பம் தலைப்பு அறிவிக்கப்பட்ட நாள் முதல் இத்திரைப்படத்தை பற்றிய எதிர்பார்ப்பு ஒரு புறம் அதிகரிக்க அதிகரிக்க, திரைப்படத்தின் ரிலீஸ் திகதியை பற்றிய செய்திகள் பல யூகங்களாக வெளிவந்தது. இன்று திரைப்படத்தின் நிர்வாக தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம் இதைப் பற்றி வெளியிட்ட பத்திரிக்கைக் குறிப்பில், ஆரம்பம் அஜீத் ரசிகர்களுக்கு ஒரு தீபாவளி விருந்தாக இருக்கும், படப்பிடிப்பு முடிந்து விட்டாலும் படத்தை மெருகேற்றும் இறுதிக்கட்ட வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. யுவன் சங்கர் ராஜாவின் இசை, மிக பெரிய அளவில் பேசப்படும். ஆரம்பம் படத்தின் இசை வெளியீட்டை குறித்த தேதி ஓரிரு நாளில் அறிவிக்கப்படும் என்றார்.



பொங்கலுக்கு வீரம், சிவா இயக்கத்தில் அஜீத் நடிக்கும் வீரம் திரைப்படத்தை பொங்கலுக்கு வெளியிடத் திட்டமிட்டிருப்பதாக அஜீத்தின் பி.ஆர்.ஓ அறிவித்துள்ளார்.

## இயக்குனரின் கோபத்துக்கு ஆளானார் சமந்தா!

தான் நடிக்கும் கதாபாத்திரங்களை உளறிவிடுவதால் இயக்குனரின் கோபத்துக்கு ஆளாகியுள்ளார் நடிகை சமந்தா. சித்தார்த்துடன் தெலுங்கில் நடித்து வந்தது வரை, தினமும் ஒரு அரை மணி நேரமாவது அவருடன் கடலை போடுவதை வாடிக்கையாக கொண்டிருந்தார் சமந்தா. தற்போது அவரும் அருகில் இல்லாததால் தினமும் தான் பேச நினைப்பதையெல்லாம் தனது டுவிட்டரில் அரங்கேற்றுகிறாராம். அதைப்படித்து விட்டு அவரது ரசிகர்களும், நண்பர்களும் கமெண்ட் கொடுத்து வருகிறார்களாம். ஆனால், சில சமயங்களில் தான் நடிக்கும் படங்களில், படப்பிடிப்புகளில் நடைபெறும் விசயங்களையும் டுவிட் செய்து விடும் சமந்தா, அந்த படங்களில் தான் நடிக்கிற வேடத்தைப்பற்றியும் பேச்சுவாக்கில் உளறுவதைப்போன்று கொட்டி விடுகிறாராம். இதனால் படம் முடிகிற வரைக்கும் படத்தின் கதையையும், நடிக்கிற கதாபாத்திரத்தையும் சீக்ரெட்டாக வைத்திருக்க வேண்டும் என்று சமந்தாவிடம் கண்டிசன் போட்டிருக்கும் இயக்குனர்கள், அவர் எல்லா ரகசியங்களையும் டுவிட்டரில் போட்டு உடைப்பதைப்பார்த்து டென்சன் ஆகிறார்களாம். அதில் சமீபத்தில் ஒரு இயக்குனர் சமந்தாவிடம் ரொம்பவே கோபித்துக்கொண்டாராம். இதனால் இனி சினிமாவை தவிர்த்து எனது பர்சனல் விசயங்களை மட்டுமே டவிட் செய்வேன் என்று கூறி உள்ளாராம் சமந்தா.

## ஹாலிவுட் செல்லும் ஜீ. வி. பிராகாஸ்

வெயில் படத்தின் மூலம், இசையமைப்பாளராக அறிமுகமான, ஜி.வி.பிரகாஸ், சமீபத்தில் வெளியான தலைவா படம் வரை, பல படங்களுக்கு இசையமைத்து விட்டார்.



பாலிவுட்டிலும் ஒரு படத்துக்கு இசையமைத்துள்ளார். தற்போது, அவருக்கு ஒரு ஹாலிவுட் படத்தில் இசையமைக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளதாம். இதை தன் சமூக வலைத்தளம் மூலம் மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டுள்ள அவர், முதல்படத்திலேயே என் முத்திரையை பதிப்பேன். எதிர்காலத்தில் ஹாலிவுட்டிலும் எனக்கென தனி இடத்தை பிடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன் என கூறியுள்ளாராம். ஜி.வி.பிரகாசுக்கு ஹாலிவுட் படத்துக்கு அழைப்பு வந்துள்ளதை அடுத்து, மற்ற இசையமைப்பாளர்களுக்கும் ஹாலிவுட் ஆசை வந்துள்ளதாம்

## ஸ்டைலை மற்றும் சமீரா ரெட்டி

ஸ்டைலை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும் என்று அட்வைஸ் தருகிறார் சமீரா ரெட்டி.

வாரணம் ஆயிரம் திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர் சமீரா. அதனைத் தொடர்ந்து அசல், வெடி போன்ற படங்களில் நடித்துள்ளார். இவர் தனது திரையுல மேக்கப் குறித்து கூறுகையில், எதிலும் சீக்கிரம் திருப்தி அடைய கூடாது.



வாரணம் ஆயிரம் தொடங்கி நான் நடித்த எல்லா கதாபாத் திரங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகவே இருக்கும். அதிலும் எனது காஸ்டியும், மேக்அப் என்று ஒரே பாணியில் இல்லாமல் மாறுபட்ட தோற்றங்களை ஏற்றேன்.

நிஜ வாழ்க்கையிலும், சினிமா வாழ்க்கையிலும் இந்த மாற்றம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஒரே பாணியில் உடை அணிந்து ஸ்டைலை பராமரித்துக் கொண்டிருந்த பாணியை கை கழுவி விட்டேன். இப்போது சோதனை முயற்சிகளைத்தான் நிறைய மேற்கொள்கிறேன். சீக்கிரம் எதிலும் திருப்தி அடையக்கூடாது.

என்னை பொறுத்தவரை எதையும் பாதுகாப்பு கருதி குறைத்துக்கொள்ளவும் மாட்டேன். நீண்ட கூந்தல், பெரிய கண்கள், சிவப்பு லிப்ஸ்டிக், இறுக்கமான உடை இதெல்லாம் பெண்கள் கையாளும் பாதுகாப்பான ஸ்டைல். ஆனால் இப்படி ஒரே பாணியில் இருந்துவிடக் கூடாது. எல்லா பாணியும் எல்லோருக்கும் பொருந்திவிடாது. நமக்கு எது பொருத்தமாக இருக்குமோ அதை தேடி கண்டுபிடிக்க வேண்டும் என்கிறார் சமீரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொக்கியாவை வாங்குகின்றது மைக்ரோசொப்ட்

அமெரிக்காவின் மைக்ரோசாப்ட் நிறுவனம் பின்லாந்து நாட்டின் நோக்கியா மொபைல்போன் வர்த்தகத்தை 7.2 பில்லியன் டொலருக்கு வாங்கவிருப்பதாக ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த வர்த்தகம் முடிவடைந்தவுடன் நோக்கியா நிறுவனத்தின் முக்கிய நிர்வாக அதிகாரியான ஸ்டீபன் எலோப் மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் இணைந்துகொள்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மொபைல்போன் வர்த்தகத்தில் முன்னிலையில் இருந்த நோக்கியா நிறுவனம் தற்போது ஸ்மார்ட்போன் தயாரிப்பு நிறுவனங்களான ஆப்பிள், சாம்சங் போன்றவற்றுடன் போட்டி போடமுடியாமல் திணறுகிறது. கடந்த 2011-ம் ஆண்டு முதலே மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் சோதிக்கப்படாத விண்டோஸ் மென்பொருள் தொழில் நுட்பத்தினைத் தங்களுடைய மொபைல்போனில் நோக்கியா உபயோகித்து வருகின்றது. இந்த முயற்சியின் வெற்றியே இன்னும் கிட்டவேண்டியுள்ளது.



இதனிடையில், புதிய ஒப்பந்தம் வரும் 2014-ம் ஆண்டின் முதல் காலாண்டிற்குள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான ஒப்புதலை, நோக்கியா நிறுவனம் ஒழுங்குமுறை ஆணையத்திடமிருந்தும், நிறுவனத்தின் பங்குதாரர்களிடமிருந்தும் பெறவேண்டும். எதிர்காலத்திற்கான ஒரு தைரியமான நடவடிக்கை இது என்று மைக்ரோசாப்ட் தலைமைப் பொறுப்பில் இருந்து விரைவில் ஓய்வு பெறும் ஸ்டீவ் பால்மர் கூறியுள்ளார்.

# ஆண்களிடம் பழகும் பெண்கள் கவனிக்க வேண்டியவை!

* ஆண்கள், உங்களிடம் பேசும் போது தனது மனைவியை உங்களோடு ஒப்பிட்டு பேசுவதையோ அல்லது அவளுக்கு ஒன்றுமே தெரியாது என்று மதிப்பை குறைத்துப் பேசுவதையோ அனுமதிக்காதீர்கள்.
* தேவையே இல்லாமல் எதற்கெடுத்தாலும் சத்தமாக சிரிக்காதீர்கள். இது ஆண்களை உங்களை பற்றி தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்த தூண்டும்.
* உங்கள் வீட்டில் விழா, விசேஷம் தவிர வேறு எந்த விஷயத்திற்காகவும் உடன் வேலைப் பார்க்கும் ஆணை தேவையில்லாமல் வீட்டுக்கு அழைக்காதீர்கள். நீங்களும் எந்த காரணமும் இல்லாமல் துணையில்லாமல் அவர்கள் வீட்டிற்கு செல்லாதீர்கள்.

* எதற்காகவும், எந்த பிரச்சினைகளுக்காகவும் ஆண்கள் முன்னால் அழாதீர்கள். அழும் பெண்களை சுலபமாக ஆண்கள் திசை திருப்பிவிடுகிறார்கள்.
* ஆண் எந்த நோக்கத்திற்காக உங்களிடம் பேசுகிறான் என்று அவன் நோக்கத்தை அவன் வார்த்தைகளிலும், கண்களிலும் இருந்து பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதைப்பொறுத்தே ஒரு பெண் ஆணிடம் பழகும்போது அந்த உறவை எவ்வளவு தூரத்தில் வைக்கலாம் என்று வரைமுறைப்படுத்திக் கொள்ள முடியும்.

# விளையாட்டுப் பையன்

## புதிய வடிவில் தயார் நிலையில் விண்டோஸ் 8.1 ஒக்டோபரில் வெளியிட அனைத்து ஏற்பாடுகளும் தயார்

மைக்ரோசாப்ட் நிறுவனம், தன் விண்டோஸ் 8 பதிப்பில், வாடிக்கையாளர்களின் விருப்பங்களுக்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்தி, விண்டோஸ் 8.1 என்ற புதிய பதிப்பாக வடிவமைத்துள்ளது. தற்போது இந்தத் தொகுப்பு, கம்ப்யூட்டர் தயாரிப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் நிலையை அடைந்துவிட்டது. இதனை "release to manufacturing" என அழைப்பார்கள். ஒப்பரேட்டிங் சிஸ்டம் ஒன்று, வர்த்தக ரீதியாக வெளியிடப்படுவதற்கு முந்தைய நிலை இது. மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அனைத்து சோதனைகளையும் இது கடந்து, அனைத்தும் சரியென்ற நிலையை அடைந்துவிட்டது என்று பொருளாகிறது. எனவே, உறுதியாக, வரும் அக்டோபரில் இத்தொகுப்பு மக்களுக்குக் கிடைக்கும் எனத் தெரிகிறது. ஏற்கனவே, விண்டோஸ் 8 தொகுப்பினை வாங்கியவர்களுக்கு, இந்த தொகுப்பு இலவசமாகவே வழங்கப்படுகிறது என்பது இதன் சிறப்பு. இப்போதும் கூட, விண்டோஸ் 8.1 சோதனை பதிப்பினை, மக்கள் இலவசமாக டவுண்லோட் செய்து பயன்படுத்தலாம். ஆனால், விண்டோஸ் 8.1 வெளியாகும்போது, இதனை நீக்கிவிட்டுத்தான் புதிய பதிப்பினை இன்ஸ்டால் செய்திட வேண்டும்.

மற்ற அப்ளிகேசன் சாப்ட்வேர் தொகுப்புகளையும் இன்ஸ்டால் செய்திட வேண்டி யதிருக்கும். இந்த இட var disqus_title =




புதிய வடிவில் தயார் நிலையில் விண்டோஸ் 8.1. ஒக்டோபரில் வெளியிட அனைத்து ஏற்பாடுகளும் தயார்

# ஒரு கொலையின் கதை

19 (மாயன்)



கொலைக்கான ஏதுவைத் திரட்டிக் கொள்ள அவர்களுக்கு உதவப் போகும் காரணிகளில் ஒன்றாக அவர்கள் குறித்துக் கொண்டது.... தற்போதும் பின் இரவு வேளைகளில் இயங்கிக் கொண்டிருக்கும் அலிக வின் கைத்தொலைபேசியே..........

புலனாய்வாளர்கள் இப்போதும் மிக இரகசியமாகவே தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியவர்களாக இருந்தனர்.

தற்போது அவர்களுக்கு முன் இருக்கும் மிகப் பெரிய பொறுப்பு, ஏற்கனவே கூறியது போல, அலிக, டொடி மற்றும் கேதீஸ் ஆகிய மூவருக்கும் இடையேயான தொடர்பு என்ன? என்பதைக் கண்டுகொள்வதாகவே இருந்தது.

அதன் பொருட்டு முதலாவது புலனாய்வு அணியொன்று டொடி பற்றிய விசாரணைகளைத் தொடங்கியது. அவ் விசாரணைகளின் போது டொடி மிக அண்மையிலேயே அலிக வுடன் தொடர்புகளைப் பேணுவது தெரிய வந்தது. ஆக அலிகவும் டொடியும் ஒன்றும் இணை பிரியா நண்பர்கள் அல்ல....

அடுத்து தெரிய வந்த விடயம் யாதெனில் டொடி தனது வீட்டை பிணையாகக் கொடுத்து கிட்டத்தட்ட முன்னூறு ஆயிரம் ரூபாய்களை ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்தது. பல நாட்களாக வட்டியோ முதலோ செலுத்தப் படாமலிருந்த அக் கடனுக்கு பணம் செலுத்தும்படி கடன் கொடுத்தவன் டொடியை நெருக்கி வந்துள்ளான். கொலைக்குச் சில நாட்களுக்கு முன்பாக டொடி இக் கடனாளிக்கு கடனை மிக விரைவில் திருப்பித் தருவதாக உறுதியளித்திருந்தான்.

இவ்விரு விடயங்களும் டொடி சம்பந்தமாகப் புலனாய்வாளர்களால் திரட்டப்பட்டவற்றுள் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

அவ்விரு தகவல்களையும் வைத்துப் புலனாய்வாளர்கள் முக்கியமான முடிவொன்றை எட்டினர். அம் முடிவு திடுக்கிடத்தக்கதாக இருந்தது............

"டொடி ஒரு ஒப்பந்தக் கொலைஞன்" (Contract Killer) என்பதே அம் முடிவாக இருந்தது.

டொடி ஒரு ஒப்பந்தக் கொலைஞன் என்றால் அக் கொலையைச் செய்யத் தூண்டியது, அல்லது அக்கொலைக்காக டொடியைப் பணிக்கமர்த்தியவனாக அலிக இருக்க வேண்டும் என்பதே புலனாய்வாளர்களின் ஊகமாக இருந்தது.

அடுத்து நிரூபிக்க வேண்டிய விடயம் எதுவெனில் அது அலிக ஏன் கேதீஸைக் கொல்ல வேண்டும் என்பதே! அதற்காக அவர்கள் அவனது இரவுத் தொலைபேசியை ஒட்டுக் கேட்பதா? அல்லது நேரடியாகக் களத்தில் குதித்துச் சந்தேகத்திற்கிடமானவர் என்பதால் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தி விசாரணைக்கு உட்படுத்துவதா? என்ற கேள்வியை புலனாய்வாளர்கள் தம்முள்ளே கேட்டுக்கொண்டனர்.

கொலை நடந்த நாள் ஏப்ரல் மாதம் 18ம் திகதி 2012ம் ஆண்டு. அதன் பின்னரான விசாரணைகளைப் படிப்படியாக முன்னெடுத்து வந்த புலனாய்வாளர்கள் ஒரு நிலையில் திசை தெரியாக் காட்டினுள் விடப்பட்ட நிலையை அடைந்தனர். ஆனால் அங்கிருந்து அவர்களை இக் கொலை தொடர்பாக மேலும் இயக்கிய ஒளி அவர்கள் கையகப் படுத்திய ஒரே தடயமான கைத் தொலைபேசி நிரப்பு அட்டையே.

அதன் [illegible] கொண்டு [illegible]

தற்போது உறுதியான சந்தேகங்களுடன் இருவரின் மீது புள்ளியிட்டிருந்த புலனாய்வாளர்கள் மேலும் சில நாட்களை எடுத்து, தொலைபேசி அழைப்பை ஒட்டுக் கேட்டு, சந்தேகத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ள எண்ணியிருந்த போது.......

டொடியைப் பின்தொடர்ந்து கொண்டிருந்த புலனாய்வாளர் அனுப்பிய செய்தி புலனாய்வாளர்களின் அவசர நடவடிக்கையை உந்தித் தள்ளியது.... ஜுன் மாதம் 3ம் திகதி இரவு அச் செய்தி உறுதிப்படுத்தப்பட்டது....அது என்ன செய்தி.....

"டொடி... இந்தியப் பயண அனுமதிக்கான இரண்டு விண்ணப் பங்களைப் பெற்றுக் கொண்டான்" என்ற செய்தியே!

உடனடி உசார் நிலைக்கு மாறியது புலனாய்வுத் துறை. செய்தியைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் இருவரையும் கடும் கண்காணிப்பில் வைத்திருக்கவும், தேவையேற்பட்டால் உடனடியாகக் கைது செய்யவும், இந் நடவடிக்கைக்குப் பொறுப்பேற்றிருந்த விறள் மிக்க உதவிக் காவல்துறை அத்தியட்சகர், கட்டளையைப் பிறப்பித்திருந்தார்.,

அன்று ஜுன் மாதம் 4ம் திகதி. கொலை நடந்து சரியாக 48வது நாள் காலை புலனாய்வாளர்களின் கூட்டம் நடைபெற்றது. டொடி ஏன்? இந்திய பயண அனுமதிப் பத்திரங்களைச் சேகரித்துள்ளான்? அதுவும் இரண்டு பத்திரங்கள்... எனில் சந்தேக வட்டத்துக்குள் தாம் இருவரும் வீழ்ந்துள்ளதை அவர்கள் உணர்கின்றார்களா? என்ற கேள்வி [illegible] அங்கு கூடியிருந்த [illegible]யே எழுந்தது. அவ்வாறு அவர்கள் உணருவார்கள் ஆயின்... அதற்கும் மேல்தாமதிப்பது இவ் வழக்கின் ஒரே தடயமாக கிடைத்த நிரப்பு அட்டை சுட்டி நிற்கும் சந்தேக நபர்களை இழந்து விடவேண்டிய நிலையை ஏற்படுத்தும் என்பதை எல்லோருமே வாதமின்றி ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அக் கணத்தில்.....அமைதியாக ஆனால் உறுதியாக அவ் விறல் மிக்க காவ்லதுறை அத்தியட்சகரின் குரல் மேலெழுந்தது..... "நாளை மறுநாள் அவர்களைக் கைது செய்வோம்......"

அவர்கள் இருவரையும் கரந்தடி நடவடிக்கையின் ஊடாகக் கைது செய்வது என்று முடிவானது!

அத்துடன் கைது இரண்டும் ஒரே நேரத்தில் நிகழ வேண்டும் என்பதும் அதற்கான சட்டரீதியான, சகல ஏற்பாடுகளும் 5ம் திகதிக்குள் நிறை வேற்றப்பட வேண்டும் என்றும் 5ம் திகதி இரவு எட்டு மணிக்கு புலனாய்வாளர்கள் அனைவரும் தயாராக வேண்டும் என்றும், தயாராகிய பின்னர் கைது செய்யும் திட்டம விபரிக்கப்படவேண்டும் என்றும் தீர்மானமாகியது.

தொடர் கண்காணிப்பில் இருந்த இருவரையும் கண்காணித்த புலனாய்வினரிடமிருந்து அடுத்த செய்தி கிடைத்தது. அச் செய்தி இந்தியப் பயண அனுமதிப் பத்திரங்கள் இரண்டும் டொடியினால் அலிக விடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவித்தது. ஆக அவர்கள் இருவரும் ஏதோவோர் திட்டத்துடன் மிக விரைவில் நாட்டை விட்டுப் போகப் போகின்றார்கள்....

ஜுன் 2012, 5ம் திகதி இரவு 8 மணி, அளவான இரவுணவின் பின் புலனாய்வாளர்கள் அனைவரும் கூடியிருந்தனர். கைது செய்வதற்கான சட்ட, நிர்வாக ஏற்பாடுகள் யாவும் பெறப்பட்டிருந்தன. அத்தியட்சகர் கைது செய்யும் திட்டத்தை வெளிப்படுத்தத் தொடங்கினார். அது........ (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யங் ஒலிம்பிக்ஸ் கழகம் வெற்றி

திருகோணமலை வேல்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் யங் ஒலிம்பிக்ஸ் கழகத்திற்கும் இடையிலான ஏழாவது கிரிக்கெட் போட்டியில் யங் ஒலிம்பிக்ஸ் கழகம் 51 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி 01.09.2013 அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யங் ஒலிம்பிக்ஸ் கழக அணி முதலில் துடுப்பபெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 49.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த 293 ஓட்டங்களைப் பெற்றது. 294 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய வேல்ஸ் கழகத்தினர் 48 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 248 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். இதன்மூலம் யங் ஒலிம்பிக்ஸ் கழகம் 51 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இப்போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராக வேல்ஸ் கழகத்தின் சிவலிங்கம் பிரதீபனும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், போட்டி நாயகனாகவும் யங் ஒலிம்பிக்ஸ் கழகத்தைச் சேர்ந்த ஜே.டிரோன்ஸும் தெரிவு செய்யப்பட்டனர்.



## கபடியில் தங்கம் வென்ற மட்டக்களப்பு மாவட்ட அணிக்கு விருது வழங்கி கௌரவிப்பு

தேசிய ஸ்ரீலங்கா யூத் கபடி போட்டியில் தங்கப்பதக்கத்தை சுவீகரித்துக் கொண்ட மட்டக்களப்பு மாவட்ட அணி வீரர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மட்டக்களப்பில் வைத்தே இவர்களுக்கு 31.08.2013 அன்று சனிக்கிழமை விருது வழங்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு செய்த இப்பாராட்டு விழா மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.எல்.எம்.என்.நைறூஸ் தலைமையில் நடைபெற்றது. மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் கே.தவராஜா சிறப்பு அதிதியாகவும் மட்டக்களப்பு பிரதேச செயலாளர் எஸ்.கிரிதரன் பிரதம அதிதியாகவும் கலந்து கொண்டனர். அந்த அணியைச்சேர்ந்த 12 வீரர்களும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



## 2016 ஒலிம்பிக்குடன் ஓய்வுபெற திட்டமிடும் அதிவேக மனிதன் போல்ட்

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் 2016ம் ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிக்குப் பின்பு ஓய்வு பெற திட்டமிட்டுள்ளதாக ஜமைக்காவின் உசைன் போல்ட் அறிவித்துள்ளார். உலகின் அதிவேக மனிதர் என்றழைக்கப்படும் போல்ட், களத்தில் மின்னல் வேகத்தில் இலக்கைக் கடந்து பதக்கங்களை குவித்து வருபவர். இவர், களத்தில் இருக்கும் வரை மற்றவர்கள் பதக்கம் வெல்வது இயலாது என்ற சூழல் தற்போது நிலவி வருகிறது. இந்நிலையில், 2016 ஒலிம்பிக் போட்டிக்குப் பிறகு தனது ஓய்வு குறித்து பரிசீலிக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், ரியோ ஒலிம்பிக் போட்டியில் அதிக தங்கப் பதக்கங்களை வெல்ல வேண்டும். 200 மீற்றர் ஓட்டப் பந்தயப் போட்டியில் மீண்டும் உலக சாதனை படைக்க வேண்டும். காமன்வெல்த் விளையாட்டிலும் தங்கம் வெல்ல வேண்டும். அதற்குப் பிறகு ஓய்வு பெறுவது குறித்து பரிசீலிப்பேன் என்றும் விளையாட்டில் உச்சத்தில் இருக்கும்போதே ஓய்வு பெறுவது நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன் எனவும் தெரிவித்தார்.



போல்ட் வென்ற தங்கங்கள்: ஒலிம்பிக் போட்டியில் போல்ட் இதுவரை 6 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். 2008ம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 100 மீ, 200 மீ, 4x100 தொடர் ஓட்டம் ஆகியவற்றிலும், 2012 லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 100மீ, 200 மீ, 4ழ100 தொடர் ஓட்டம் ஆகியவற்றிலும் தங்கம் வென்றுள்ளார்.

பெயர் : குமார் சங்கக்கார
வயது : 35 வருடங்கள்
பிறந்த திகதி : 1977.10.27
இடது கை துடுப்பாட்ட வீரர்
விக்கட் காப்பாளர்




| | MAT | INNS | RUNS | H/S | AVG | 100s | 50s | CTs | STs |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Test | 117 | 200 | 10486 | 287 | 56.97 | 34 | 42 | 169 | 20 |
| ODI | 354 | 331 | 11798 | 169 | 39.99 | 16 | 78 | 353 | 85 |
| T20I | 45 | 43 | 1178 | 78 | 31.83 | 00 | 07 | 20 | 18 |

# இலங்கை கிரிக்கெட்டும் அதன் இன்றைய நிலையும் - 2

- லியோ ஆனந்த் -

பந்து வீச்சை பொறுத்தவரை முத்தையா முராளிதரனின் ஓய்வு இன்றுவரை மீள் நிரப்பமுடியாத பெரிய வெற்றிடமாகக் காணப்படுகிறது. மற்றும் சமிந்த வாஸ்சின் ஓய்வுக்குப்பின் வேகப்பந்து வீச்சாளர்களை தேர்வு செய்வதில் தடுமாற்றம் நிலவுகிறது. இவ்வாறு நோக்குகையில் முரளிதரன், வாஸ் ஆயோரின் கையில்தான் இலங்கை அணியின் பந்துவீச்சு பகுதி தங்கியிருந்தது என்று கூறுவது வெட்கப்பட வேண்டிய விடயம். அதற்காக இன்று இலங்கை தீவினிலே சிறந்த பந்து வீச்சாளர் ஒருவருமே இல்லை என்று கூறமுடியாது. சமத்துவம் என்ற ஒரு சொல் எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்படும் எனின் இன்றைய இலங்கை அணிக்கு முழுமையாக வீரர்களின் திறமையை பயன்படுத்த முடியும்.

2015 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவில் நடைபெற உள்ள உலககிண்ண தொடருடன் குமார் சங்ககார, மஹெல ஜயவர்தன, திலகரட்ண டில்ஷான் ஆகியோரின் ஓய்வு அறிவிக்கப்படும் என்பது அனைவரும் எதிர்பார்க்கும் விடயம் அணித்தலைவரைக் தெரிவு செய்வதில் கூட நிலை தடுமாறிவரும் அணி இவர்களின் ஓய்விற்குப் பின்னர் அவ்விடயங்களை நிரப்ப என்ன செய்யும் என்பது ஒரு தொடரும் வினாக் குறியாகவே காணப்படுகிறது.

உலக கிண்ணத்துடன் இலங்கையணியின் மூத்த வீரர்களான குமார் சங்ககார, மஹெல ஜயவர்தன, திலகரத்ன டில்ஷான் ஆகியோர் ஓய்வை அறிவிப்பார்கள் என்பது பலரது



எதிர்பார்ப்பு. அது அவ்வாறு இருக்க, 2013 வருட இறுதியில் இவர்களது ஓய்வு அறிவிக்கப்படும் என எடுகோள் ஒன்று எடுத்துப் பார்போமானால். ஸ்திரமற்ற ஒரு நிலையைத்தான் இலங்கை கிரிக்கட் அணி எதிர்கொள்ளும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இன்று டெஸ்ட், ஒரு நாள் போட்டிகளில் இலங்கை கிரிக்கட் அணி கடந்த ஒரு வருட காலத்தில் தரப்படுத்தலில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை ஆனால் T20 போட்டிகளில் இலங்கை முதலாவதாகத்தானே இருக்கிறது என பலர் கேட்கலாம். T20 என்பது கிரிக்கட்டை சற்று கவர்ச்சிகரமாக காட்டுவதற்காக தொடங்கப்பட்ட ஒரு கண்காட்சி யாகவே கருதமுடியும். ஒரு சிறந்த வீரனின் வெளிப்பாடு டெஸ்ட், ஒருநாள் போட்டிகளில் வெளிப்படுகிறது. குறிப்பாக டெஸ்ட் (Test) என்றபெயருடன் விளையாடுவ[illegible] அதுதான். [illegible] முழுமையாக பரிசீலிப்பது ஆகும். முத்த வீரர்கள் அணியை விட்டு வெளியேறும் பட்சத்தில் தற்போது துடுப்பாட்டத் திலாவது முன்னணியில் உள்ள இலங்கையணி அதிலும் பின்னகர்வை தொடங்கும். இலங்கையணியை பொறுத்தவரை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை இறக்குவதிலேயே திடமான முடிவு இன்னமும் காணப்படவில்லை. அதற்கு அடுத்ததாக களமிறங்கும் வீரர்களும் அணிக்கு ஓட்டத்தை சேர்பதில் குறியாக இருக்கிறார்களே தவிர களத்தில் நிலைப்பது தொட்ர்பாக கவனம் செலுத்துவது மிகவும் குறைவாகவே உள்ளது.

பந்து வீச்சில் நிரந்தர சுழல் பந்து வீச்சாளர் ஒருவர் முரளிதரனின் ஓய்வுக்கு பின் இல்லை. இருக்கும் ஒரு சிலரும் போட்டியை திசைதிருப்பக் கூடிய வல்லமையில் 'இல்லாமை கவலைக்குரிய விடயம்.

எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை வீரர்கள் ஐ.பி.எல் தொடரில் கொண்டுள்ள மோகம் இலங்கை கிரிக்கட் வளர்ச்சி குன்றிபோவதற்கு ஒரு காரணியாக குறிப்பிடலாம். இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டு சபை இந்திய அணியின் பலத்தை அதிகரிப்பதற்கு உரிய ஒரு நடவடிக்கையாகவே இந்தியன் பிரீமியர் லீக் தொடர் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை வீரர்கள் ஐ.பி.எல் இல் காட்டும் மோகத்தை ஸ்ரீலங்கன் பிறீமியர் லீக்சில் காட்டுவார்களே ஆனால் இலங்கையணி மேலும் வலுப்பெற வாய்புக்கள் அதிகம்.

இலங்கை கிரிக்கட் நிர்வாக குழுவானது உதாரணத்திற்கு இந்திய நிர்வாகக் குழுவை அணித்தேர்வில் பயன்படுதிக் கொள்ளலாம். அதற்காக இந்தி நிர்வாக குழு பூரணமாக சரியாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்று பொருட்டல்ல.

இலங்கையில் இன்று விளையாட்டுக்கள் என்று எடுத்து நோக்கினால் கிரிக்கட் மட்டுமே சர்வதேச ரீதியில் வெளிப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இலங்கை அரசாங்கமானது மற்றைய விளையாட்டுக்களின் வளர்ச்சிக்கு வழி காட்டாமல், வளர்ச்சி அடைந்துள்ள கிரிக்கட் துறைக்குள் மூக்கை நுளைப்பது தவறு. அண்மையில் இலங்கைக் கால்பந்து கூட்டமைப்பை ஊக்குவிக்கும் வகையில் சர்வதேச கால்பந்து சம்மேளனம் (FIFA) 50 கோடி ரூபா நிதியினை ஒதுக்கியிருந்தது. அதேவேளை அந்நிதி, மோசடி இடம்பெற்றதாக கருதி சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் ஒரு குழு அதனை ஆராய்ச்சி செய்வதற்கு இலங்கை வந்தமை குறிப்படத்தக்கது.

மிகுதி அடுத்த வாரம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள்வங்கி அறும்நிலையில்

கடன்களில் மூழ்கும் நிலையிலுள்ள மக்கள் வங்கியினைக் காப்பாற்றிக் கொள்ள அவ் வங்கியினை அரைப்பங்கு தனியார் மயமாக்குவதற்காக பங்குகளைத் தனியாருக்கோ அல்லது ஏனைய நிறுவனங்களுக்கோ விற்க வேண்டும் எனும் கதை எழுந்துள்ளது.

52 ஆண்டு கால அரச வங்கியின் நிலை இவ்வாறிருப்பதாகத் தெரிகின்றது. தனியார் மயமாக்கலை எதிர்க்கும் அவ் வங்கிய்ன ஊழியர்களின் எதிர்ப்பைப் பின்தள்ளிவிட்டு அச் செயலை முன்னெடுக்க வேண்டிய நிலை தோன்றியிருக்கின்றது.

இந் நிலையை ஒட்டுமொத்தமாக மறுத்த வங்கியின் உயரதிகாரியொருவர் சிறுகச் சிறுக வங்கியின் மொத்த மூலதனமான 50 மில்லியன் ரூபாய்களுக்கும் மேலதிகமாக அரசு பணத்தை வங்கிக்குட் செலுத்துவதாகத் தெரிவித்தார். 2004ம் ஆண்டு தொடக்கம் 08ம் ஆண்டு வரை சுமார் 7.1 பில்லியன் ரூபாய்களை அரசு வங்கிக்குட்

**the SUNDAY TIMES**

செலுத்தியுள்ளது என்றார். என்றாலும் சட்ட வரைஞர் ஒருவர் மக்கள் வங்கிச் சட்டமான 1961ம் ஆண்டின் 29ம் இலக்கச் சட்டத்தை மாற்றியமைக்கும் உத்தேசச் சட்டத்தை வரைந்து வருவதாக நம்பகமாகத் தெரிய வருகின்றது.

## வெலிவேரியவில் எழுந்து நிற்கும் மக்கள்

வெலிவேரியவிலுள்ள கையுறை உற்பத்திச்சாலையை மீளத் திறக்கும் முயற்சியை மக்கள் போராட்டத்தால் கைவிட வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

ஆலையைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை அறிந்த மக்கள் அப் பிரதேசத்தின் விகாராதிபதியின் தலைமையில் ஆலையைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். பெண்கள் சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் இந் நடவடிக்கையில் ஈடுபட்டபோது ஆயுதம் தாங்கிய காவல்துறையினர் பாதுகாப்பின் நிமித்தம் நூற்றுக் கணக்கில் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். ஆயினும் அவ்வாலையைத் தற்காலிகமாகத் திறக்கும் அனுமதியை சனாதிபதியே வழங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

## சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது...... சனநாயகம் சாகின்றது....

போரின் பின்னர் கிடைத்த அற்புதமான வாய்ப்பைக் கொண்டு நாட்டைக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுள்ள அரசின் போக்கியால் சனநாயகம் செத்துக் கொண்டு இருக்கின்றது என்பதுடன் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்றும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையர் தெரிவித்துள்ளார்.

## காவல்துறை நாய்களின் திருமணம் – குரைப்பும் கடிப்பும்

காவல்துறை நாய்களுக்குச் சிங்களக் கலாசார முறையில் திருமணஞ் செய்து வைத்ததால் எழுந்துள்ள சர்ச்சைகள் முடிந்தபாடில்லை. இன்னமும் அதிகமாகக் குரைப்புக்களும் கடிப்புக்களும் அரங்கேறி வருகின்றன.

கண்டிய முறைப்படி நடந்த திருமணத்தின் உண்மை நிலையைக் கண்டறிய சிரேட்ட காவல்துறை மா அதிபர் ஒருவர் விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளார்.

கலாசார அமைச்சரின் வேண்டுகோளை ஏற்ற காவல்துறை மா அதிபர் இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக சிரேட்ட காவல்துறை மா அதிபரான காமினி நவரட்ணவை நியமனஞ் செய்துள்ளார்.

காவல்துறையினர் மன்னிப்பைக் கோரியுள்ள போதிலும் அம் மன்னிப்பு கணக்கெடுக்கப்படவில்லை

**SUNDAY OBSERVER**

Sri Lanka's English Newspaper with the largest circulation

## இலங்கையின் அடைவுகளால் இன்பமடைந்தார் பிள்ளை

இலங்கைக்குப் பயணத்தை மேற்கொண்டிருந்த ஐ.நாவின் ஆணையர் இலங்கை கட்டுமாணம், மீள் குடியேற்றம் மற்றும் புணர்நிர்மாணம் ஆகியவற்றில் அடைந்துள்ள அடைவுநிலைகளைக் கண்டு புளகாங்கிதம் அடைந்துள்ளார். குறுகிய காலத்திற்குள் இவ்வாறான நிலையை இலங்கை எட்டியுள்ளதை அவர் மெச்சியுள்ளார்.

யுத்தத்தின் இறுதிக்காலத்தில் நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்களை சர்வதேச விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்ற சர்வதேச அழுகையை தனது பயணம் துடைத்துவிடும் எனத் தெரிவித்துள்ளார். வாரம் முழுவதும் தான் விரும்பிய இடங்களுக்கெல்லாம் பயணம் மேற்கொண்ட பிள்ளை நம்பத்தகுந்த முறையிலான தேசிய விசாரணையொன்றை முன்னெடுப்பதும் சாத்தியமானதே எனத் தெரிவித்திருந்தார்.

## சுன்னாகம் துணை மின்நிலையம் செப்.15ல்

இரு தசாப்தத்திற்கும் மேலாக தேசிய மின் திட்டத்திலிருந்து விலக்கப்பட்டிருந்த வடக்கை மீண்டும் தேசிய மின் வழங்கலில் உள்ளடக்கும் முகமாக எதிர்வரும் 15ம் திகதி தொடக்கம் சுன்னாகம் துணை மின்நிலையம் செயற்படவுள்ளது. அதனைத் தொடங்கி வைக்க சனாதிபதி அங்கு வரவிருக்கின்றார்.

## கார்பைட் மருந்து கலந்த பழங்கள் – கவனம் –

செயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்ட பழங்கள் தொடர்பாகக் கவனத்துடன் இருக்குமாறு மக்களை சுகாதார அமைச்சு கேட்டுக் கொள்கின்றது. விற்பனையாளர்கள் பழங்களைப் பழுக்க வைப்பதற்காக கார்பைட் இரசாயனத்தைப் பாவிப்பதை நாம் எமது பரிசோதனைகளில் இருந்து கண்டு கொண்டுள்ளோம்.

கார்பைட் நச்சுத் தன்மையானது அல்ல. ஆனால் அவ் இரசாயம் தவறான வேறு கலவையுடன் உபயோகிக்கப் படுமானால் நஞ்சாகிவிடும் ஆபத்தைக் கொண்டுள்ளது. ஆதலால் மக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## த.தே.கூ மீது கடுப்பில் அமைச்சர்

கடலில் அத்துமீறல்களை உருவாக்கி வடமாகாண மீணவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையிலான உறவைப் பலவீனப்படுத்த அரசே முயல்வதாக த.தே.கூ குற்றஞ்சாட்டி வருவதைக் கேள்வியுற்ற கடல்வள மீன்பிடித்துறை அமைச்சர் த.தே.கூவின் மீது கடும் கடுப்பாக இருக்கின்றார்.

இந்திய, இலங்கை மீனவர்களிடையே பல சுற்றுப் பேச்சுக்களை நிகழ்த்த இலங்கை அரசு முயன்றாலும் வட பகுதி மீனவர்கள் இந்திய அத்துமீறலை அனுமதிக்கப் போவதில்லை என்ற ஒரே கோசத்துடன் இருக்கின்றார்கள்.

ஆனால் த.தே.கூ வோ அதன் முன்னைநாள் எசமானர்களான விடுதலைப் புலிகளோ இந்திய மீனவர்களுடன் நெருக்கமான உறவைப் பேணிக்கொண்டிருப்பதுடன், வடமாகாண மினவர்களின் வாழ்வாதாரத்தை முழுமையாக கைவிட்டுவிட்டனர். ஆனால் அரசுதான் அவ் வடமாகாண மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் முனைப்புடன் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தி வருகின்றது என்று தெரிவித்தார்.

## அகவை 62ல் சுதந்திரக் கட்சி

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கிய பங்காளிக் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சி தனது 62வயதை கொண்டாடுகின்றது.

அக் கொண்டாட்டம் சனாதிபதியின் தலைமையில் குருநாகலையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந் கூட்டத்துடன் மாகாண சபைக்கான தேர்தல் பரப்புரையினையும் சனாதிபதி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

**The Sunday LEADER**

## பிள்ளைக்குப் பதிலடி தயார்

இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய போது நவநீதம்பிள்ளை அவர்கள் வெளிப்படுத்திய வாய்மொழி மூலமான கருத்துக்களால் உருவாகவுள்ள நேர்மையற்ற மற்றும் ஆதாரமற்ற கண்டனங்களுக்கு பதிலடி கொடுக்க அரசு தயாராயுள்ளது.

இப் பதிலடியினை அவர் தனது பயண அறிக்கையினை எழுத்தில் வழங்கும் போதே கொடுக்கவுள்ளதாக வெளிவிவகாரச் செயலர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆணையர் தமது அலுவலகமொன்றை இலங்கையில் திறப்பதற்கான எந்தவொரு முன்மொழிவுகளையும் மேற்கொள்ள வில்லை என்றும் செயலர் தெரிவித்தார்.இலங்கை மனிதவுரிமை ஆணையம் தனது வருடாந்த அறிக்கையினை ஏன் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வதில்லை என்ற கேள்வியை எழுப்பிய போது அவ் ஆணையம் இனிவரும் காலங்களில் அவ்வாறு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்துள்ளது.

## இலஞ்ச ஊழல் திணைக்களத்தின் முன் மேவின்

மேவின் சேர்த்து வைத்துள்ள சொத்துக்கள் தொடர்பாக மேற் கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக மேவினை இலஞ்ச ஊழல் ஆணையம் அழைத்துள்ளது. விசேடமாக அதிசொகுசு வாகனங்களில் வலம் வரும் மேவினின் மகனின் வாகனங்கள் தொடர்பாகவே இவ் விசாரணை நடைபெறவுள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

## லீடர் பத்திரிகையின் துணை ஆசிரியரின் வீடுடைப்பு சந்தேகநபர்கள் கைது

மேலும் விசாரணைகளை முன்னெடுக்க இலகுவாக காவல்துறையினர் இரண்டு சந்தேக நபர்களை காவ்லதுறைக் காவலில் எடுத்துள்ளனர். லீடர் பத்திரிகையின் உதவி ஆசிரியரான மந்தனா இஸ்மைலின் வீட்டிற்குக் கன்னமிட்டு அவரை அச்சுறுத்தி, கொள்ளையடிக்க முயன்ற குற்றத்தில் கைதான நால்வரில் இருவரே இவ்வாறு காவல்துறை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஏனைய இருவரும் தற்போதும் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளனர்.

## கும்பிடுவதற்கு இனிப் புதிதாக இடம் தர மாட்டேன்

கோட்டை நகர சபைக்குட்படும் எல்லைகளுக்குள் புதிதாக இனி எந்தவொரு வணக்கத்தலத்தையும் உருவாக்க அனுமதிக்கப் போவதில்லை என கோட்டை நகர மேயர் அறிவித்தல் விட்டுள்ளார். நகர திட்டமிடல் வடிவத்திற்கு ஏற்ப நகரம் இருப்பதை உறுதிப்படுத்தவே இவ் அறிவித்தல் விடப்பட்டுள்ளதாக மேயர் தெரிவித்தார். அத்துடன் தவறயைகளுயம், இறைச்சிக் கூடங்களையும் புதிதாகத் திற்ப்பதற்கான ஒழுங்குவிதிகளையும தாம் வினியோகித்தள்ளதாக அவர் குறித்தார்.

## முகா விலக ஐ.ம.சு.மு விரிகின்றது

மாகாணசபைத் தேர்தல்களில் அரசிற்க ஆதரவளிப்பதில்லை என்ற முடிவை மு.கா தலைமைப் பீடம் மேற் கொண்டுள்ளது.

அத்துடன் மு.காவின் தலைமைப் பீடத்துடன் பேசாமல் தாமாகவே இலங்கை சுதந்திரக் கட்சிக்குத் தாவிஅக் கட்சியின் வேட்பாளர்களாக மாகாண சபைத் தேர்தல்களில் களமிறங்கவுள்ள ஐந்து மு.கா உறுப்பினர்களதும் அங்கத்துவத்தை இல்லாதொழிக்கவும் மு.காவின் உயர் பீடம் அங்கீகாரம் வழங்கியிருப்பதாக மு.காவின் செயலர் தெரிவித்துள்ளார்.

## காணாமற் போனோர் தொடர்பாக விசாரணைகளைத் துவக்குக

வலுக்கட்டாயமாகக் காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை அரசு ஆரம்பிக்க வேண்டும் என அம்னஸ்டி இன்ரநெசனல் இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவ்வாறு காணாமற் போனோரில் அறிக்கையிடப்பட்டவர்கள் தொகை 1980ம் ஆண்டு முதல் சுமார் 12,000 எனவும் உண்மைத் தொகையாக 1994ம் ஆண்டுவரை சுமார் 30,000 பேர் இருந்திருக்கலாம் எனவும் அதன் பின் வரும் ஆண்டுகளில் மேலும் பல ஆயிரங்களை இத் தொகையுடன் கூட்ட வேண்டும் எனவும் அவ்வமைப்பு கூறியுள்ளது.

உலகில் கட்டாயப் படுத்தப்பட்டுக் காணாமற்போனோரின் பட்டியலில் இலங்கை ஈராக்கிற்கு அடுத்தபடியாக இருப்பதாக அவ்வமைப்பு குற்றங்கூறியுள்ளது. ஜுலை 26, 2013ல் அரசு காணாமற்போனோர் பற்றி அறிய சனாதிபதி ஆணைக்குழுவொன்றை உருவாக்கவுள்ளதாக அறிவித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான
## பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 05

பகுதி $I$

1. யூரியா சிறுநீரில் காணப்படும் பிரதான நைதரசன் கழிவுப்பொருளாகும். யூரியா உருவாக்கத்திற்கு காரணமான போசணைப் பதார்த்தமும் யூரியா தோற்றுவிக்கப்படும் அங்கத்தையும் சரியாகக் காட்டுவது எது?

| போசணைப் பதார்த்தம் | அங்கம் |
|---|---|
| 1. குளுக்கோசு | ஈரல் |
| 2. குளுக்கோசு | சிறுநீரகம் |
| 3. அமினோவமிலம் | ஈரல் |
| 4. அமினோவமிலம் | சிறுநீரகம் |

2. அணுவானது நேரேற்றம் கொண்ட துணிக்கையின் மீது மறையேற்றம் பதிந்துள்ளது என விளக்கிய விஞ்ஞானி யார்?
   1. $J.J.$ தொம்சன் 2. இரதபோட் 3. ஜேம்ஸ் சட்விக் 4. குருக்ஸ்
3. திருகாணி எவ்வகைக்குரிய பொறியாகும்?
   1. நெம்பு 2. சில்லும் அச்சாணியும் 3. சாய்தளம் 4. கப்பி
4. அணுவொன்றில் ${}^{23}_{11}A$ எனக் குறித்துக் காட்டப்பட்டிருந்தது. இம்மூலகத்தின் $A^+$ அயனுக்கு சமமான புரோத்தன் எண்ணிக்கையைக் கொண்ட மூலகம் யாது?
   1. $F$ 2. $Ne$ 3. $Na$ 4. $Mg$
5. சூழலில் காட்டப்பட்டுள்ள அங்கியொன்றின் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.
   (அ) செதில்களைக் கொண்ட உலர்ந்த தோல்
   (ஆ) அவயவங்களைக் கொண்டிருக்கவில்லை
   (இ) உடலில் புறவன் கூடு காணப்படவில்லை.
   இவ்வியல்புகளைக் கொண்ட விலங்கு வகுப்பு யாது?
   1. அம்பியா 2. ரெப்ரீலியா 3. மமேலியா 4. மொலஸ்கா

06. $25^\circ$ வெப்பநிலையை கெல்வின் அலகில் சரியாகக் காட்டுவது எது?
   1. $125\,K$ 2. $298\,K$ 3. $303\,K$ 4. $313\,K$


07. பெண்ணின் குரல் ஒலியை ஆணின் குரல் ஒலியிலிருந்து வேறுபடுத்தி இனங்காணப் பயன்படும் ஒலியின் சிறப்பியல்பு எது?
   1. பண்பு 2. சுருதி 3. உரப்பு 4. அலைநீளம்

08. $A$ என்னும் மூலகம் காபனேற்றுடன் தாக்கமடைந்து சேர்வையை உருவாக்கியது. $A_2CO_3$ ஆனது பொஸ்பேற்றுடன் அமைக்கும் மூலக்கூற்று சூத்திரம் யாது?
   1. $A[PO_4]_2$ 2. $A_2PO_4$ 3. $A_2(PO_4)_3$ 4. $A_3PO_4$

09. அமிழ்ப்பு வெப்பமாக்கியில் இருந்து அதிக வெப்பத்தைப் பெறுவதற்கு செய்யக்கூடாத மாற்றமாக அமைவது?
   1. சுருளின் நீளத்தை அதிகரித்தல்
   2. கம்பியின் குறுக்குவெட்டு முகத்தை அதிகரித்தல்
   3. கம்பியின் இரு முனைகளுக்கிடையில் அழுத்த வேறுபாட்டை அதிகரித்தல்
   4. கம்பியினூடு பாயும் மின்னோட்டத்தை அதிகரித்தல்.

10. கிற்றார் ஒன்றிலிருந்து உயர் சுருதியைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகளில் பயனற்றது எது?
   1. மிக மெல்லிய கம்பியை அருட்டுதல்
   2. கம்பியை பலமாக அருட்டுதல்
   3. கம்பியின் நீளத்தைக்குறைத்தல்
   4. கம்பியின் இழுவையை அதிகரித்தல்

11. வீட்டு மின்சுற்றில் காணப்படும் குதை ஒன்றினை படம் காட்டுகிறது. இதனுடன் இணைக்க வேண்டிய கம்பிகளை சரியாகக் காட்டுவது எது?




   1. $A$ யிலிருந்து $B$ இற்கு வெப்பம் கடத்தப்படுகின்றது.
   2. $B$ யிலிருந்து $A$ இற்கு வெப்பம் கடத்தப்படுகிறது.
   3. $A$ யிலிருந்து $B$ இற்கும், $B$ யிலிருந்து $A$ யிற்கும் வெப்பம் கடத்தப்படுகின்றது.
   4. வெப்பம் கடத்தப்படுவதில்லை

12. கலனிடைவெளிகள் உள்ளதும் செலுலோசினால் தடிப்புற்ற உச்சிகளையுடைய பல்கோண உருவமுடைய இழையம் எது?
   1. ஒட்டுக்கலவிழையம் 2. புடைக்கலவிழையம்
   3. வல்லுருக்கலவிழையம் 4. யாவும் சரி

13. புறதிருப்பத்தைக் காட்டும் மூலகச்சோடி எது?
   1. $N,P$ 2. $C,S$ 3. $C,I$ 4. $S,N$


14. மாயவன் ஒருவன் வீட்டு முற்றத்தில் தட்டையான பாறை மீது இருந்த இலைச்சருகுகளை சேர்த்து மூட்டினான். அது எரிந்து முடிந்ததும் பெருமழை பெய்தது. அடுத்த நாள் அக்கல்லில் வெடிப்புகள் காணப்பட்டன. இது எதற்கு உதாரணமாக அமையும்.
   1. பாறைகள் வானிலையால் அழிதல் 2. பாறைகளின் தகனம்
   3. பாறைகள் உருவாதல் 4. பாறைகள் இரசாயனப் பொருளால் அழிதல்


கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்
குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியங்குளம்.


### பாடம் - கணிதம், 05

25. 1 : 500 என்ற அளவிடையில் வரையப்பட்ட பூந்தோட்டத்தின் அளவிடைப் படத்தின் பரப்பளவு $6cm \times 4cm$ ஆல் கொடுக்கப்படுகின்றது. பூந்தோட்டத்தின் உண்மையான பரப்பளவை சதுர மீற்றரில் காண்க.

26. $x$ இன் பெறுமானம் யாது?




பகுதி $B$

05. செங்கோண முக்கோணியை அடியாகக் கொண்ட ஓர் அரிய கண்ணாடி திண்மத்தில், செங்கோணத்தை அமைக்கும் பக்கங்களின் நீளங்கள் முறையே $8cm$, $6cm$ ஆகும். அவ் அரியத்தின் நீளம் $20cm$.
   அ. முக்கோணத்தில் செம்பக்கத்தின் நீளம் யாது?
   ஆ. செங்கோண முக்கோணி ஒன்றின் பரப்பளவைக் காண்க.
   இ. முக்கோணியின் செம்பக்கத்தை ஒரு பக்கமாகக் கொண்ட செவ்வகத்தின் பரப்பளவு யாது?
   ஈ. இத் திண்மத்தின் கனவளவு யாது?

பகுதி $IIA$

01. ரூபா 30,000 விலையுள்ள குளிரூட்டி ஒன்றை முதலில் ரூபா 12,000 செலுத்தியும் மீதியை ஒவ்வொன்றும் ரூபா 1,695 கொண்ட 12 சமமாத தவணைக் கட்டணங்களில் செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம்.
   அ. முதல் செலுத்துகையின் பின் எஞ்சிய தொகை யாது?
   ஆ. ஒரு மாதத்தில் செலுத்தும் கடனின் பெறுமானம் யாது?
   இ. செலுத்த வேண்டிய மொத்த வட்டி யாது?
   ஈ. மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
   உ. ஒரு மாத அலகிற்கான வட்டி எவ்வளவு?
   ஊ. வருட வட்டி வீதம் யாது?

02. அ. $a = \lg\frac{13}{4}$, $b = \frac{600}{7}$, $c = \frac{14}{39}$ எனின், மடக்கையை பயன்படுத்தாது $a+b+c$ யின் பெறுமானம் யாது?

   ஆ. மடக்கையை உபயோகித்து பெறுமானம் காண்க. $\frac{(4.23)^2 \times \sqrt{0.02635}}{187.6}$

03.
அ. நேர்விளிம்பு, $cm/mm$ அளவுச்சட்டம் என்பவற்றை மாத்திரம் பயன்படுத்தியும் அமைப்புக் கோடுகள் யாவற்றையும் தெளிவாக காட்டியும் $AB = 7.2cm$, $BC = 10.5cm$ ஆகவும், $\angle BAC = 120^\circ$ ஆகுமாறு முக்கோணி $ABC$ யை அமைக்குக.

ஆ. $C$ யில் இருந்து $AB$ க்கு $CX$ என்னும் செங்குத்தை வரைக. அதிலிருந்து முக்கோணி $ABC$ இன் பரப்பளவைக் காண்க.

இ. $A, C$ என்னும் புள்ளிகளுக்கு சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை அமைக்க.

ஈ. $A, B$ ஆகிய புள்ளிகளில் இருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை அமைக்க.

உ. இவ்விரு ஒழுக்குகளும் சந்திக்கும் புள்ளியை $O$ என குறிக்க.

04. $Y = 7 - X^2$ எனும் சார்பின் வரைபை வரைவதற்கு,
அ. தரப்பட்டுள்ள அட்டவணையை பூர்த்தி செய்க.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| X | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
| Y | -2 | | | 7 | | 3 | |

ஆ. $x$ அச்சு வழியே 10 சிறு பிரிவுகளை ஓர் அலகாகவும், $y$ அச்சு வழியே 10 சிறு பிரிவுகளை இர அலகாகவும் கொண்டு சார்பை வரைக.
ஆ. சார்பின் உயர் புள்ளியைத் தருக.
இ. சார்பு நேராக குறையும் $x$ இன் பெறுமான வீச்சைத் தருக.
ஈ. $\sqrt{7}$ இன் பெறுமானத்தைக் காண்க.

05. நடுப்புள்ளித் தேற்றத்தை எழுதுக.
முக்கோணி $ABC$ யில் $D, E$ என்பன முறையே $AB, AC$ என்பவற்றின் நடுப்புள்ளிகளாகும். $BA$ யிற்கு சமாந்தரமாகவும் $C$ யினூடாகவும் வரையப்படும் நேர்கோடானது நீட்டப்பட்ட $DE$ யை $F$ இல் சந்திக்கிறது. $A$ யினூடாகவும், $BC$ யிற்கு சமாந்தரமாகவும் வரையப்படும் நேர்கோடானது நீட்டப்பட்ட $CF$ யை $H$ இல் சந்திக்கிறது.
   அ. வரிப்படம் வரைந்து குறிக்க.
   ஆ. $A$ ஆனது $GH$ இன் நடுப்புள்ளி என நிறுவுக.
   இ. $ABCH$ ஒரு இணைகரம் எனவும் நிறுவுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி - 6 பாடம் - வரலாறு

(23)
1. இலக்கியத்தின் தந்தை — A தாந்தே
2. மானிடவியலின் தந்தை — B பிரான்ஸிஸ்பேர்கன்
3. ஆங்கில இலக்கியத்தின் தந்தை — C பெட்ராக்
4. வானியல் விஞ்ஞானத்தின் தந்தை — D நிக்கலஸ் கொபனிகஸ்

1. ABCD 2. ACBD 3. BCDA 4. BDCA

(24) மானிய முறையின் அம்சமாக கருத கூடியது
1. ஆட்சி முறை ஒருமுகப்பட்டிருந்தது
2. கலைஞர்கள் தங்களின் கலைப்படைப்புக்களை சுதந்திரமாக வெளியிட்டமை
3. பணக்கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வங்கி முறை தோற்றம்
4. மக்களின் வாழ்க்கையில் சமயத்துக்கு முன்னுரிமை அளித்தமை

(25) பின்வரும் கண்டு பிடிப்பாளர்களின் தொகுதியில் பொருத்தமற்ற கூற்று
1. மோட்டார் வாகனம்- டெம்லர்
2. ஆகாய விமானம்-றைட்சகோதரர்கள்
3. பாதுகாப்பு விளக்கு-ஜோர்ஜ் ஸ்ரீவன்கன்
4. நீராவி கப்பல்-றொபர்ட் புல்டன்

(26) 1818 ஆம் ஆண்டு கிளர்ச்சியை முன்னெடுத்த தலைவர்அல்லாதவர்
1. ஹெப்பட்டிப்பொல 2. மடுகல்ல
3. வீரபுரன் அப்பு 4. 2ம் பிலிமத்தலாவ

(27) இனவாதி பிரதி நிதித்துவம் அறிமுகம்
*கட்டாய இராஜகாரிய முறை ஒழிப்பு
*அரசு வர்த்த ஏகபோக உரிமை நீக்கல்
*மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய யாப்பு

1. டொனமூர் 2. கோல்புறூக் கமரன் 3. மனிங் 4. சோல்பரி

(28) கொழும்பை மையமாகக் கொண்டு செயற்பட்ட மிஸனரி இயக்கம்
1. பட்டிஸ்ட் 2. வெஸ்லியன் 3. அமெரிக்கன் 4. லண்டன்

(29) சரசவிசந்தரெஸ, த புடிஸ்ட் என்ற பத்திரிகையின் ஆசிரியர்
1. ஹென்றி ஸ்ரீல் ஓல்கொட் 2. அநகாரிக தர்மபால
3. டி.பி ஜாயா 4. M.C.சித்திலெப்பை

(30) இலங்கையினல் ஆங்கிலேயர் ஆட்சினால் ஏற்பட்ட விளைவு அல்லாதது
1. பெருந்தோட்டபயிர்ச் செய்கை அறிமுகம்
2. ஏற்றுமதி இறக்குமதி பொருளாதார கோலம் உருவாக்கம்
3. மத்தியதர வர்த்தகம் உருவாக்கம்
4. பரீஷ் பாடசாலை(கோவில்பற்று)தோற்றம்

(31) இந்திய சுகந்திர போராட்டத்தில் பஞ்சாப் சிங்கம் என வர்ணிக்கப்படும் தேசிய வீரர்
1. லாலா லஜ்பதிராய் 2. தாதாபாய் நபுரோஜி
3. பாலகங்காதரதிலகர் 4. சுபாஸ் சந்திரபோஸ்

(32) இந்தியாவில் முஸ்லீம்களுக்கு தனிநாடு வேண்டும் என முதன்முதலில் பாடிய கவிஞன்
1. அல்லாமா இக்பால் 2. M.C. சித்திலெப்பை
3. தாதாபாஸ் நபுரோஜி 4. அலி ஜின்னா

(33) சீனா முதலாளித்துவ பாதையில் செல்வதை தடுக்க மாவே சேதுங் முன்னெடுத்த செயல்திட்டம்
1. முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் 2. நீண்ட நடைப் பயணம்
3. கலாசாரப்புரட்சி 4. கோமின்டாங் படை அமைப்பு

(34) தொகுகாவா சோகுன்களின் ஆட்சி முடிவுக்கு காரணமாக அமைந்த பிரதான விடயம்
1. சோகுன்களின் ஆடம்பர வாழ்வு
2. படைப்பலம் பலவீனம்
3. அமெரிக்காவுடனான வர்த்தக உடன்படிக்கை
4. சத்சுமா மீதான பிரித்தானிய குண்டு வீச்சு

ஆசிரியர் -
**த.அகிலன்,**
Dip. In Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை
வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் 01

பிரதீபா

01. பின்வரும் பாடலை வாசிக்க.

கடலின் மீது செல்லும் கப்பல்
பார், தம்பி, பார் - அதைக்
காணப் பலர் வருவதையே
பார், தம்பி, பார்

சங்கும் நல்ல கிளிஞ்சல்களும்
பார், தம்பி, பார் - இங்கே
சரளமாக கிடைக்குதடா
பார், தம்பி, பார்

தடதடென்று அலைகள் வந்து
பார், தம்பி, பார் - காலைத்
தழுவி விட்டுப் போவதையே
பார், தம்பி, பார்

பொங்குகின்ற பாலினைப் போல
பார், தம்பி, பார் - இங்கு
தங்கி நிற்கும் நுரையுண்டு
பார், தம்பி, பார்

அ. மேற்குறித்த பாடலில் எதனைப் பற்றி விபரிக்கப்படுகிறது?
ஆ. இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக.
இ. இங்கு பெயராகவும், வினையாகவும் வரும் சொல் எது?
ஈ. எழுவாய் அடைமொழி ஒன்றை எழுதுக.
உ. 'கிளிஞ்சல்' என்பதன் ஒத்த சொல்லை எழுதுக.
ஊ. இங்கு இடம்பெறும் இரட்டைக்கிளவி எது?
எ. "கடலலை காலைத் தழுவி விட்டுப்போவதைப் பார்" என்ற வாக்கியத்தை பன்மை வாக்கியமாக எழுதுக.

02. உடல் ஆரோக்கியத்திற்கு ........................................ சிறந்தது.
1. மூளிகைத்தைலம் 2. மூலிகைத்தைளம் 3. மூழிகைத் தைலம் 4. மூலிகைத்தைலம்

03. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தைத் தருக.
1. ஒற்றைக் காலில் நிற்றல்........................................
2. உச்சி குளிர்தல் ........................................

04. பின்வரும் வாக்கியத்திற்கு பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.
1. அரசன், ஆசிரியர், தந்தை, தாய், தமையன் ஆகியோர் ....................
2. ஒரு பொருள் தானே தன் கதையைக் கூறுதல் ....................

05. நிறுவனம் ஒன்றிற்கு மசகு எண்ணெய் விநியோகம் மு.ப. 11.45 இற்கு ஆரம்பமானது. சுமார் 35 நிமிடங்கள் அவ்விநியோகத்திற்கு செலவிடப்பட்டதெனின், மசகு எண்ணெய் விநியோகம் முடிவடைந்த நேரத்தை காண்க.

06. அண்ணனின் தற்போதைய வயது அவனது தம்பியின் தற்போதைய வயதின் 3 மடங்காகும். 6 வருடங்களுக்கு முன் அண்ணனின் வயது 18 ஆயின் தம்பியின் தற்போதைய வயது என்ன?

07. பயணத்தை ஆரம்பித்த போது பேரூந்து ஒன்றின் மானியில் பின்வருமாறு பதியப்பட்டு இருந்தன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 0 | 3 | 8 | 9 | 9 | 0 | கி.மீ |

வாகனம் மேலும் 11கி.மீ சென்ற பின் மானியில் பதிவாகும் இலக்கங்களை வெற்றுக் கூடுகளினுள்ளே எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | கி.மீ |

08. தமிழ் பாடத்தில் கந்தன் 40 - 80 க்கு இடையிலும் குமரன் 60 ற்கு குறைவாகவும் கமல் 30 - 60 ற்குமிடையிலும் புள்ளிகள் பெற்றனர். எனின், இவர்களில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர் யார்?

09. ஒரு பண்ணையில் உள்ள மாடுகளின் எண்ணிக்கை 950. அங்குள்ள ஆடுகளின் எண்ணிக்கை மாடுகளின் எண்ணிக்கையைப் போன்று இரு மடங்காகும். அங்குள்ள வாத்துக்களின் ஆடுகளின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 50 அதிகமாகும். பண்ணையில் உள்ள மூன்று உயிரினங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?

10. இடைவெளி நிரப்புக.
1. நல்ல கருத்துக்களை .................. ஆர்வம் வேண்டும். (அறிய, அரிய)
2. மழை வெள்ளம் எங்கும் ................ பாய்ந்தது. (பறந்து, பரந்து)
3. காகம் அங்கும் இங்கும் ................ இரை தேடியது. ( பறந்து, பரந்து)
4. அவர்கள் ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டு மாடியிலிருந்து ...................... ( இறங்கினர், இரங்கினர்)
5. உடையில் இருந்த இரத்தக் .................... அவன் செய்த குற்றத்தைக் காட்டிக் கொடுத்தது. (கறை, கரை)

பெயர்: ..........................................................
..........................................................
முகவரி: ..........................................................
..........................................................
பாடசாலை: ..........................................................

**ரிங்கோ ஸ்ரேசனர்ஸ் வழங்கும் பரிசுகளை வெல்லுங்கள்**

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகளில் வெற்றி பெற்ற மணவர்களின் பெயர் விபரங்கள் அடுத்த வாரப்பத்திரிகையில்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மறுமை வாழ்வு பற்றிய நம்பிக்கையின் முக்கியத்துவம்

ஒரு மனிதனிடம் காணப்படும் மறுமை வாழ்வு பற்றிய நம்பிக்கை அவனது இம்மை வாழ்வை கருத்துடையதாக மாற்றுகின்றது. குறுகிய இவ்வுலக வாழ்வு நீண்டதொரு மறுமை வாழ்வுக்கான விளைநிலம் என்ற சிந்தனையை இஸ்லாம் முன்வைக்கிறது. எனவே தான் மனிதன் மறுமையை நோக்காகக் கொண்டே தன் வாழ்வை அமைத்துக்கெள்ள வேண்டும் என்று இஸ்லாம் பணிக்கிறது.


"( மனிதர்களே) நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், கேளிக்கையும், வெளிப்பகட்டு மற்றும் உங்களிடையே ஒருவருக்கு ஒருவர் பெருமையடித்துக் கொள்ளுதல், செல்வங்கள், குழந்தைகள் ஆகியவற்றில் ஒருவரை ஒருவர் மிஞ்சிவிட முற்படுதலுமேயன்றி வேறில்லை. அதற்கான உவமை:

மழை பொழிந்திடும் போது அதன் மூலம் விளைந்திடும் தாவரங்களைப் பார்த்து விவசாயிகள் மகிழ்வது போன்றதாகும். பின்னர் அதே பயிர் காய்ந்து விடுகிறது. அது மஞ்சளித்துப் போவதையும் பின்னர் பதராகி விடுவதையும் நீர் பாரக்கலாம். காய்ந்து போன பயிர் பச்சைகள், இறந்துபோன ஒரு பிராணி போன்றதே இவ்வுலக வாழ்வு என்பதை தெளிவுபடுத்துகிறது.

இம்மை, மறுமையை விட்டும் நீங்கியதாகவோ, மறுமை இம்மையை விட்டு நீங்கியதாகவோ கருதுவது பிழையானதாகும். ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்துவிடாத அம்சமாகவே இது காணப்படுகிறது. எனவேதான் நாம் அல்லாஹ்விடத்தில் எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையும் மறுமையும் நன்னையளிப்பாயாக என்று பிராத்திக்க வேண்டும்.

மேலும் ஒரு சம்பவத்தில் ஒரு ஆட்டை அறுத்து குர்பான் கொடுத்து அன்னை ஆயிஷாவிடம் நபி (ஸல்) அவர்கள் ஆட்டின் அனைத்துப் பாகங்களும் முடிந்துவிட்டதா? என்று வினவிய போது இறைச்சிகள் முடிந்துவிட்டன என்றும் எலும்பும் தோலுமே எஞ்சியிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் " முடிந்தவைகள்தான் எஞ்சியவை, எஞ்சியுள்ளவைகளே முடிந்தவைகள்" என்று விளக்கினார்கள். மேலும் தபுக் யுத்தத்தின் போது ஹஸரத் அபுபக்கர் (ரழி) அவர்கள் அல்லாஹ்வையும், ரஸீலையும் வீட்டில் வைத்துவிட்டு அனைத்து செல்வங்களையும் தியாகம் செய்தமை சேமிப்பின் இன்னொரு அடையாளமாகும்.



எனவே தான் சகோதரர்களே நாமும் இறைவனின் பாதையில் செலவு செய்து மீதமாக நடந்து எம்மையும் நம் குடும்பத்தவரையும் மறுமை வாழ்வுக்காக தயார்படுத்தி இறை விசுவாசியாக இறுதி மூச்சு வரை வாழ இறைவன் எமக்கு உள்ளத்தில் ஈமாலை உறுதிப்படுத்த வேண்டும்.

(அல் ஹதீஸ்:20) என்று மேலுள்ள ஹதீஸ் எமக்கு விளக்குகின்றது. இது பற்றி ஜாபிர் றழி அவர்கள் பின்வருமாறு அறிவித்தார்கள்.

நபி ஸல் அவர்கள் மக்கள் புடை சூழ சந்தையைக் கடந்து சென்றார்கள். அவ்வேளை இறந்து போன காது அறு பட்ட ஆட்டுக் குட்டியை கடந்து கொண்டிருந்தார்கள்.

உடனே நபியவர்கள் அதனை பிடித்து தூக்கி இதனை உங்களில் யாரவது ஒருவர் திர்ஹம் கொடுத்து வாங்க விரும்புவாரா? என கேட்டார்கள் அதற்கு மக்கள் எதனைக் கொடுத்தும் வாங்க விருப்பமில்லை இதை வாங்கி என்ன செய்ய முடியும் என்று கேட்டனர்

அதற்கு நபியவர்கள் இது உங்களுக்குரியதாக இருக்க நீங்கள் விரும்புகிறீர்களா? என வினவ அல்லாஹ்வின் மீது ஆணையாக அது உயிரோடு இருந்திருந்தாலே குறைபாடுடையதாக இருந்திருக்கும். மட்டுமல்லாமல் இறந்து விட்ட பின்னர் இதை எப்படி விரும்புவோம் என்றனர். இதனை செவியுற்ற நபியவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக உங்களுக்கு இது எவ்வளவு இழிவாகத் தென்படுகிறதோ அதனைவிட அல்லாஹ்விடம் இவ்வுலகம் அற்பமானது " என்றார்கள் (முஸ்லீம்)

எனவே மேலே கூறப்பட்ட வசனமும் நபியவர்க்ள் தெளிவு படுத்திய கருத்தும் எத்தகைய பெறுமதியும் அற்றவை என்று மனிதன் கருதுகின்ற

முஸ்தபா பர்ஹானா
ஆனைச்சேனை.

## நாளும் ஒரு நபி மொழி இல்மு - கல்வி

இறுதித் தீர்ப்பு நாளின் சமீபத்தில் அல்லாஹ்குத்தஆலா கல்வி ஞானத்தை மக்களுடைய உள்ளங்களிலிருந்து ஒரே தடவையில் எடுப்பதில்லை. ஒருவர் பின் ஒருவராக உலாமாப் பெருமக்களை அல்லாஹ் மரணிக்கச் செய்வான் கடைசியில் ஒரு ஆலிம் கூட உயிருடன் இருக்கமாட்டார். அப்போது மக்கள் அலிம்களுக்குப் பதிலாக அறிவற்றோரைத் தலைவர்களாக்கிக் கொள்வார்கள். அவர்களிடம் மார்க்கச் சட்டங்களைக் கேட்கப்படும். அவர்கள் அறிவற்றமுறையில் சட்டத்துக்கு மாற்றமாகத் தீர்ப்பளிப்பார்கள். இதன் விழைவாகத் தானும் வழிகெட்டு, இந்தத் தலைவர்கள் பிறரையும் வழிகெடுப்பார்கள் என்று நபி(ரலி) அவர்கள் அறிவித்தார்கள் (நூல் : புஹாரி) கியாமத் நாளில் உனது வயதை எவ்வகையில் செலவு செய்தாய்? கற்ற இல்மின்படி எவ்வாறு அமல் செய்தாய்? எவ்வழியில் வெல்வத்தை சம்பாதித்தாய்? அதை எவ்வழியில் செலவு செய்தாய்? தன் உடல் சக்தியை எந்த வேலையில் ஈடுபடுத்தினாய்? என்பதைப் பற்றி விசாரணை செய்யப் படாதவரை மனிதனின் பாதங்கள் கேள்வி கணக்கின்

## நான்காம் கலிபாவின் நல்லுரைகள் சில

- வாழ்க்கையானது உன்னால் ஆத்திரமூட்டப்படாத விரோதி. நீ அதனை நெருங்கவில்லை அது உன்னை நெருங்குகிறது.
- நீ அதனை தாக்கவில்லை அது உன்னை தாக்குகிறது.
- மனிதன் விடும் ஒவ்வொரு மூச்சும் மரணத்தை நோக்கி எடுத்துவைக்கப்படும் ஒவ்வொரு எட்டாகும்.
- பெருமைபேசும் ஏழை, பிறரைவளி கெடுக்க எண்ணும் வயோதிபன் தவறான வழியில் செல்லு அறிவாழி ஆகிய மூவரும் அல்லாஹ்விடத்தில் மிகவும் வெறுப்பிற்குரியர் ஆவர்.
- அறிவைத் தேடுக! நீ தனவந்தனாயின் அது உன்னை அலங்கரிக்கும். நீ ஏழையாயின் நியாய வழியில் அது உனக்கு உணவளித்துக்காக்கும்.
- உன்நாவிற்கு அஞ்சு அது குறிதவறும் ஈட்டியைப் போன்றது
- சொல்வவர் சாதாரண மனிதன் என்பதால் எவருடைய நல்ல கருத்துக்களையும் குறைவாக எண்ண வேண்டாம்.
- பலர் முன்னிலையில் ஒருவருக்கு அறிவுரை கூறவேண்டாம். ஏனெனில் அது அவன் மீது குற்றம் செலுத்துவது போலாகும். இறைவனின் அருட்க்கொடைகளை சிந்திப்பவன் வெற்றி அடைவான்.

## அல்குர்ரானின் அழகியபோதனை

" அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஆரம்பம் செய்கின்றேன் ) இன்னும் (நபியுடைய மனைவியரே ) நீங்கள் வீடுகளில் தங்கியிருங்கள் (முந்தைய அறியாமைக் காலத்தில் பெண்கள் மறைக்க வேண்டியதை மறைக்காது) வெளிப்படுத்தியதைப் போன்று வெளிப்படுத்தித் திரியாதீர்கள் மேலும் தொழுகையை நிறைவேற்றி ஸகாத்தையும் கொடுத்து வாருங்கள் அல்லாஹ்வுக்கிற்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் நபியுடைய வீட்டினரே! அல்லாஹ் உங்களிடம் நாடுவதெல்லாம் உங்களை விட்டும் சகல அசுத்தத்தையும் போக்கி உங்களை முற்றிலும் பரிசுத்தப்படுத்துவதைத்தான்

(அல் - அஹ்ஜாப் : 33 )

நபியுடைய மனைவியர்கள் தங்களுடைய தந்தைகள், தங்களுடைய ஆண் புதல்வர்களின், தங்கள் சகோதரிகளின் புதல்வர்கள், தங்கள் பெண்கள், தங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள், ஆகியயோரின் முன்னால் வருவதில் குற்றமில்லை மேலும் நீங்கள் அல்லாஹ்விற்கு பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் சாட்சியாளனாக இருக்கின்றான்.

( அல் - அஹ்ஜாப் : 55)

( விசுவாசிகளே ! நன்மையான காரியங்களைச் செய்யும் படி மனிதர்களை ) ஏவி பாவமான காரியங்களிலிருந்து ( அவர்களை) விலக்கி மெய்யாகவே அல்லாஹ்வை விசுவாசிக்கின்ற நீங்கள்தாம் மனிதர்களில் தோன்றிய சமுகதாரர்களிலெல்லாம் மிக்க மேன்மையானவர்கள். ( ஆல அம்ரான்: 110)

## இஸ்லாமியப் பெண்களுக்கான சட்டங்கள்.

### வெட்கம்

இஸ்லாமியப் பெண்களின் முன்மாதிரி இலக்கணமாகவும் சிறந்த பண்பாடாகவும் மதிக்கப்படுவது காணப்படும் இஸ்லாமிய வழிகாட்டல் அடங்கிய உயரிய நெறிமுறைகளாகும், அவ்வாறான உயரிய பண்புகளைக் கொண்ட ஒரு முஸ்லிம் பெண்ணின் நிலை புகழாரம் பெறுகின்றது.

ஷுஐப் நபி அவர்களின் ஆட்டு மந்தைகளுக்கு நீர் புகட்டிய நம்பிக்கையும் நாணயமும் மிக்க மூஸா (அலை) அவர்களை தமது இஸ்லாத்திற்கு அழைத்து வரச்சென்ற அவர்களின் பெண்மக்களின் வரலாறு பற்றி பதிவு செய்திருக்கும். பின்வரும் குர்ஆனிய செய்தியைப் படியுங்கள். அவர்களில் ஒருத்தி வெட்கத்துடன் நடந்து வந்து (மூஸா அலை) அவர்களை நோக்கி நீங்கள் நீர்புகட்டியமைக்காக உங்களுக்கு கூலி வழங்குவதற்கு எனது தந்தை உங்களை அழைக்கிறார்கள். என்றார். "அல்லாஹ் அக்பர்"

இந்த பெண்ணின் வெட்கம் பற்றிய செய்தியை எடுத்துக் கூறுபவன் ஏழு வானத்திற்கும் மேலாக இருக்கும் அர்ஷின் இரட்சபனாகிய அல்லாஹ் என்றால் நாமும் இப்படி நடப்பதால் நமக்கும் அந்த பெருமைகிடைக்கும் அல்லவா சகோதரிகளே! நாம் ஏன் அதுபற்றி விளக்கக் கூடாது. அதற்காக நம்மை ஏன் பக்குவப்படுத்திக் கொள்ளக்கூடாது? இறைவனின் பார்வையை விட்டும் வினாடியும் நாம் விலகி இருக்க முடியுமா?

**சகலரும் கடைபிடிக்க வேண்டிய அச்சம்!**

அன்பு சகோதரியே! வெட்கம் ஆண், பெண் இருபாலரும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய அம்சம் என்பதில் இரண்டாம் கருத்தில்லை. ஆனால் பெண்கள் அதிகம் கடைபிடிக்க வேண்டிய கட்டாய நெறியாகும். அதில் தான் உலகின் அமைவும், அழிவும் தங்கியிருக்கிறது. நமது தூய நபி (ஸல்லல் அலை) அவர்கள் வெட்கத்துடன் மணவறையில் இருக்கும் ஒரு பெண்ணை விட அதிக வெட்கப்பட கூடியவர்களாக இருந்துள்ளார்கள்.

**வெட்கம் ஏன்!**

ஏன்? எதற்காக வெட்கப்பட வேண்டும் என்ற ஒரு கேள்வி உங்களிடம் இருந்து எழலாம் முதலாவதாக ஈமானுடன் வாழ்வதற்காக! மற்றது நீ வெட்கப்பட வில்லையானால் விரும்பியதை செய்துகொள். (புகாரி, அபூதாவூத், அஹ்மத்) என்ற நபி (ஸல்) அவர்களின் எச்சரிக்கையில் வீழ்வதில் இருந்து காத்துக்கொள்ளலாம்.

அப்படி என்ன பெரிய விளைவுகள் வந்துவிடும் என நீங்கள் சிந்திப்பதையும் மனசிற்குள் கிசுகிசுப்பதையும் நாம் அறிவோம். வெட்கம் இல்லாமையால் ஏற்படும் விழைவுகள்

1. இஸ்லாமிய கலாச்சாரத்தில் இருந்து தூரமாகும்.
2. சினிமாவில் பிள்ளைகள் வீதம் கண்டுகளித்து, சீரழிதல்.
3. தகாத பாலியல் சந்ததிகளை உருவாக்குதல்.
4. மாற்றானுடன் எல்லை மீறிய தொடர்புக்கு வழி பிறத்தல்.
5. இறை கோபத்திற்கு ஆளாகுதல்.

மார்க்கத்தை அறிய வெட்கம் போது தம் இடத்தை விட்டு நகராது. என்பதாக நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபீபர்ஸா அஸ்லமீ (ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள் (நூல் : திர்மிதி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வளாகத்தை மாற்ற.....

கழகம், திருகோணமலை வளாகத்தைக் கவனிக்காமல் விட்டுள்ளது என்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக வினவிய போது, திருகோணமலை வளாகத்தில் 1000 மில்லியன் ரூபாய்களுக்கு மேலான அபிவிருத்தித் திட்டங்களை தாம் முன்னெடுத்துள்ளதாகவும் இனிவரும் காலப் பகுதிகளிலும் தாம் திருகோணமலை வளாக அபிவிருத்திக்கு மிக முக்கியத்துவம் கொடுக்க விருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் தமது தனிப்பட்ட நலன்களுக்காக வளாக நிர்வாகத்தை மாற்ற விரும்பும் ஒருவரின் ஆதாரமற்ற குற்றச்சாட்டாகவே இதனைக் கருத முடியும் என்று அவர் தெரிவித்தார்.

திருகோணமலை வளாகத்தைத் தனியொரு பல்கலைக்கழகமாக மாற்றுவதே தனது தூரநோக்கு எனத் தெளிவாக தெரிவித்த துணைவேந்தர் அதற்கான அடிப்படையைக் கட்டியெழுப்புவதற்காகத் தான் பாடுபட்டு வருவதாகவும் தெரிவித்தார். அந் நிலையில் இவ்வாறு வேறு பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தின் கீழ் திருமலை வளாகத்தை மாற்றுவதற்குத் தான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதுடன் அவ்வாறு மாற்ற வேண்டிய தேவைகள் எதுவுமே தற்போதுவரை ஏற்படவில்லை என்றும் தெரிவித்தார்.

அவ்வாறு பல்கலைக்கழக நிர்வாகத்தை மாற்றுமாறு கடுமையான அழுத்தங்களை எதிர்கொள்வாராயின் அவர் எவ்வகையான முடிவினை மேற்கொள்வார் என வினவியபோது வளாக நிர்வாகத்தை மாற்றும் முடிவை அரசு மேற்கொள்ளுமாயின் அதன் பிறகு தான் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியில் நீடிக்கப் போவதில்லை என்றார். ஆனால் தற்போதுள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் செயலாளர் உட்பட அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் இவ்விடயம் தொடர்பாகத் தெரியப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அனைவரும் வளாக நிர்வாகத்தை மாற்றுவதற்கு தேவைகள் எதுவுமில்லை என்ற கருத்துக்களையே கொண்டிருப்பதால் இவ்வாறு மாற்றமுயற்சிப்பது கைகூடக்கூடிய சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே எள்ளதாகவும் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

## புல்மோட்டை காணிச் சுவீகரிப்பு...

திணைக்களத்திற்குச் சொந்தமான நிலங்கள், பௌத்த சமயத்தின் "பூஜா" நிலங்கள் என்பனவே அவை என்றார்.

மேலும் இவ்வாறான இரு தலைப்புக்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ள நிலங்கள் ஐந்து இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் அரிசமலைப் பிரதேசமும் உள்ளடங்குகின்றது. இக்காணிகள் தொடர்பான அறிவித்தல்கள் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிந்தாலும் அக் காணிகள் நிலஅளவை செய்யப் படவில்லை. நிலஅளவை செய்ய முற்படும் போது பூஜா பூமி எனக் குறிக்கப்பட்ட காணிகளின் சில இடங்களில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதுடன் அனுமதிப் பத்திரமும் அக்காணிகளில் சிலவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது. இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் தொல்பொருட் துறைத் திணைக்களத்தின் கீழ் வரும் காணிகள் பொதுச்சொத்தாகக் கருதப்பட வேண்டும் என்பதுடன் அதனை உரிமை கொள்ள எவருக்கும் அதிகாரம் இல்லை.

ஆனால் பௌத்த சாசன அமைச்சின் கீழ் வரும் பூஜா பூமி என்ற காணி வகைக்குள் கட்டிடங்களோ அல்லது அனுமதிப்பத்திரங்களோ உள்ளடங்குமாயின் அவ்வகைக் காணிகளை உரிய மக்கள் மீளப் பெற்றுக் கொள்ள முயற்சித்துப் பார்க்க முடியும். ஆனால் மேற்படி மக்களின் காணிகள் என உரிமை கோருபவைகள் தொல்பொருட்துறையின் கீழா? அல்லது பௌத்த சாசன அமைச்சின் கீழா? வருகின்றன என்பதை அறிந்து கொள்ள வேண்டுமாயின் முழு நிலங்களையும் நில அளவை செய்ய வேண்டிய தேவை உள்ளது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

அவ்வாறாயின் ஏன் குறித்த காணிகளுக்குள் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்க அனுமதிக்க வேண்டாம் என கிராம உத்தியோகத்தர்களை கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளீர்கள் எனக் கேட்ட போது அவசர அவசரமாசக் சில பொது மக்கள் தவயான முன்னுணர்வுடன் காணிகள் சிலவற்றில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் அவ்வாறு அபிவிருத்தி நடவடிக் கைகளில் ஈடுபடுவதால் எவ்வித நன்மையும் அவர்களுக்குக் கிட்டப் போவதில்லை என்பதாலேயே அவ்வாறான அறிவித்தலை வழங்கியிருப்பதாகவும் பிரதேசச் செயலர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

## உப்புக்கரச்சிப்...

ஒரு சில உழவுஎந்திர உரிமை யாளர்களுக்கே இதற்கான அனுமதிப்பத்திரம் உள்ளதாகவும் ஏனையோர் அத்துமீறி இதனைச் செய்து வருவதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் இதனை தடுப்பதற்கு எதுவிதமான நடவடிக்கையினையும் இதுவரையில் எடுக்கவில்லை எனவும், ஒரு சில அதிகாரிகள் தமது சொந்த பணம், உணவு, சிகரெட் போன்றவற்றை பெற்றுக் கொண்டு அவர்களை இந்த சட்ட விரோதச் செயலை செய்ய அனுமதிப்பதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக இப்பகுதியில் மண் அகழ்வுகள் இடம் பெறுவதால் வெள்ளம், மண்சரிவு, போன்ற பேராபத்துக்களை எமது கிராம வாசிகள் எதிர்கொள்ள வேண்டி வரும் எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

## சாம்பல்தீவு பிரதான வீதியில்...

பிரதேசசபைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அக் கள்ளுக்கடை பிரதேசச் செயலாளரின் அனுமதியுடனும், கலால் திணைக்க ளத்தின் அனுமதியுடனும் திறக்கப் பட்டுள்ளதாக அப்பிரதேச த்திற்குப் பொறுப்பான வரியிறுப்பவர் தெரிவித்துள்ளதாகவும் அதனால் நடவடிக்கைகள் எதனையும் பிரதேசச்பை செய்ய முடியாது எனவும் தெரிவித்தார். என்றாலும் பல சமூக அமைப்புக்கள் இவ்விடயத்தை எதிர்ப்பதால் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு வார அவகாசம் தேவை என்பதையும் தெரியப்படுத்தினார்.

இவ்விடத்தில் கள்ளுக் கடையை அமைத்ததை எதிர்த்து சாம்பல்தீவு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம்,வடலிப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபை, சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம், நாமகள் சனசமூக நிலையம் என்பன கடிதங்களை கிராம சேவை அலுவலர் ஊடாக உரிய அலுவலகங்களுக்கு அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பிரதான வீதியூடாகவே ஐந்து கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து எழுநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்துச் செய்கின்றனர்.

இப் பெருந்தெருவின் ஊடாக இனி இரவு வேளைகளில் பயணிப்பது சிலவேளைகளில் கடினமாகலாம் எனவும் அப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

## மனைவியின் காதலன்..

தொடர்பைப் பேணிய ஒருவரைக் காவல்துறையினர் கைது செய்து விசாரித்தனர். அவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கொல்லப்பட்டவரின் மனைவியும் கொழும்பில் ஒளித்திருந்த வேளை கைதாகியுள்ளனர்.

திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவினாலேயே இக் கொலை நிகழ்ந்திருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

## அரியநேந்திரனின்...

வெலிக் கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவருடன் நாடாளுமன்ற உறுப்பின்ர் கைத்தொலைபேசி ஊடாக உரையாடி யிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டே இவ் விசாரணை நிகழ்ந்துள்ளது.

இவ்விசாரணைக்கான அழைப்பை மட்டு பிரதம காவல்துறை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட அவர் தனது சட்டத்தரணியுடன் புலனாய்வுப் பிரிவின் தலைமையகமான நாலாம் மாடிக்குச் சென்றிருந்தார். எனினும் விசாரணைகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே தனியே அழைக்கப்பட்டுள்ளார். சட்டத்தரணி விசாரணைகளின் போது சமூகம்தர உள்ளே அனுமதிக்கப் படவில்லை.

அவ்விசாரணைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில் கைதிகளிடம் கைத்தொலைபேசிகள் இருக்கின்றனவா என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் கைதிகளின் உறவஜனர்கள் என்னுடன் தமது பிரச்சனைகள் தொடர்பாக உரையாடுவது வழக்கமாகும்.

அத்துடன் எனது கைத்தொலைபேசிக்கு அழைப்புக்களை மேற்கொள்பவர்களது தொடர்பு துண்டிக்கப்பட்டால், அல்லது அழைப்புக்கு நான் அப்போது பதிலளிக்காது விட்டால், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் மீண்டும் அழைப்பை மேற்கொண்டு பேசுவது எனது வழமையான செயற்பாடாகும் என அவர் விசாரணையில் தெரிவித்ததாகக் கூறியுள்ளார்.

## தேசிய இளைஞர் படையணிப் பயிற்சி

திருமலையில் தேசிய இளைஞர் படையணியால் கந்தளாய் பிரதேசத்தின் சக்கரைத் தொழிற்சாலை அருகில் இனம், மொழி, வேறுபாடின்றி மூன்று இனத்தவருக்குமான தற்பாதுகாப்பு பயிற்சி வழங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியின் போது மும்மொழிக் கல்வியும் கணிணிக் கல்வியும் இலவசமாக வழங்கப்பட உள்ளதாகவும், பயிற்சியின் நிறைவில் சான்றிதழ்களும் வழங்கப்ப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. அத்தோடு சீருடை, உணவு, தங்குமிட வசதியும் போக்குவரத்துச் செலவும் இலவசமாக வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிசிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி டிசம்பர் 10.

மேலதிக தொடர்புக்கு 0262244088, 0710377377 அழைக்கவும்: இணையத்தள முகவரி www.youth corps .lk



## நவநீதம்பிள்ளை...

ஏனைய பகுதிகளிலிருந்து நீக்கப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளின் இடங்களை நிரப்பும் போது அவ்விடங்களுக்கு கிளிவெட்டி முகாம் மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதாகவும் அதன் பேறாகவே அவர்களுக்கு சமுர்த்தி உதவி கிடைக்கப் பெற்றதாகவும் அவர் தெரிவித்தார். சமுர்த்தி உதவிகளுக்கு மேலதிகமாக, திருமண உதவி, மரணச் செலவு உதவித்தொகை, புலமைப் பரிசில் பண உதவித் தொகை, வைத்தியச் செலவுக்கான உதவுதொகை போன்றவைகளும் அவர்களுக்குக் கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் நவநீதம்பிள்ளை அவர்களின் வருகையை முன்னிட்டே கிளிவெட்டி முகாம் சுத்தமாக்கப்பட்டது என்ற செய்தியையும் மறுத்துள்ள அவர் கிளிவெட்டி, பட்டித்திடல் மற்றும் மணற்சேனை முகாம்களைத் திருத்துவதற்கு கிட்டத்தட்ட ஆறு மில்லியன்களுக்கு மேற்பட்ட நிதி ஒதுக்கப்பட்டு கடந்த ஜூன் மாதம் முதல் இராணுவத்தின் உதவியுடன் திருத்தி வருகின்றோம். எனவே அதன் படியே முகாம் திருத்தப்பட்டது என்பதையும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் மலைமுரசில் வெளியான மகுடம் சஞ்சிகையின் ஐந்தாவது ஆண்டிதழ் தொடர்பான கட்டுரையை வரைந்தவரின் பெயர் தவறுதலாக ''கௌரீஸ்'' என இடப்பட்டுள்ளது.
அக்கட்டுரையை எழுதியவர் செல்வி. வாசுகி குணரட்ணம் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்

## கொடுப்பனவு எப்போது?

பாலையூற்று "குடைமாதா" சந்தியில் அமைந்துள்ள புகையிரத பாதுகாப்பு கடவையில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு கிரமமாக உரிய முறையில் கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லையென தெரியவருகிறது. இந்த கொடுப்பனவுகளை வழங்க அவ்வூரிலுள்ள நான்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முன்வந்த போதிலும் உரிய நேரத்தில் அவை செலுத்தப்படாததினால் நிலுவைகள் அதிகரித்துள்ளன. ஏற்கனவே மூன்று ஊழியர்கள் கடமை புரிந்த இடத்தில் தற்பொழுது இரண்டு ஊழியர்கள் மாத்திரமே கடமை புரிகின்றனர். கொடுப்பனவுகள் தாமதமாகுவதால், தற்பொழுது கடமையிலுள்ள ஊழியர்கள் கடமையை கைவிட்டு விடுவார்களானால் அப்பகுதியில் உயிர் சேதங்களும், வாகன விபத்துக்களும் ஏற்பட்டுவிடுமோ? என அப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர். ஏற்கனவே அப்பகுதியில் பல விபத்துக்கள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(மரியதாஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை வளாகத்தை மாற்றும் முயற்சிகளை உடன் நிறுத்துக - திருமலை நகர சபை

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கும் திருகோணமலை வளாகத்தை மற்றொரு பல்கலைக் கழகத்தினுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்லத் தனிப்பட்ட சிலர் முயற்சிப்பதைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக திருமலை நகர சபை தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

கடந்த வாரம் கூடிய திருகோணமலை நகரசபையின் மாதாந்தக் கூட்டத் தொடரிலேயே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.


அத்துடன் இத் தீர்மானத்தில் அவ்வாறு கொண்டு செல்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் யாவும் உடன் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரியிருப்பதுடன் எதிர்வரும் காலங்களில் அவ்வாறான முயற்சிகள் எவையும் எடுக்கப்படக் கூடாது எனவும் கோரப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.




## திருமலையில் திடீரெனக் காணாமற் போகும் மனிதர்கள்

கடந்த 30ம் திகதி சல்லிக் கோயில் கடற்கரை வீதியைச் சேர்ந்த சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஒருவரை, தம்மைப் புலனாய்வுத் துறையினர் என அடையாளம் காட்டிய ஆயுதம் தாங்கிய குழுவொன்று கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளது.

இவரைக் கைது செய்ய வந்தவர்கள் மீன்வாங்க வந்தவர்கள் போல மீன் குளிரூட்டி வண்டியொன்றில் வந்துள்ளனர். குறித்த நபரின் வீட்டிற்குச் சென்று அவரது தொலைபேசி இலக்கத்தைப் பெற்ற பின் குறித்த நபரை வாடிக்கு வருமாறு அழைத்து அங்கிருந்தே கைது செய்து அழைத்துச் சென்றதாகத் தெரிகின்றது. 30ம் திகதி கடத்தப்பட்ட இவர் 31ம் திகதி மாலை 3 மணிக்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.



மேலும் கோணசபுரி காவல்துறை அலுவலகத்திற்கு அண்மையிலுள்ள வீடொன்றிற்கு வருகை தந்த இனந்தெரியாதவர்கள் 18 வயது நிரம்பிய இளைஞன் ஒருவனை தேடிச் சென்றதாகவும் அதே போல பலரது பெயர்களைக் கொண்ட பட்டியல் ஒன்றை அந்த இனந்தெரியாதவர்கள் தம்முடன் வைத்திருப்பதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.




## சாம்பல்தீவு பிரதான வீதியில் உல்லாச புரியாய் கள்ளுக்கடை

நிலாவெளியிலிருந்த சாம்பல் தீவு மற்றும் சல்லி நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் இரண்டாவது திருப்பத்தில் கடந்த 2ம் திகதி திடீரெனப் புதிதாகக் கள்ளுக் கடையொன்று திறக்கப்பட்டுள்ளது.

இக்கள்ளுக்கடையில் வேலை நேரம் காலை 10 மணி தொடக்கம் மாலை 2 மணிவரையும் பின்னர் மாலை 4 மணி முதல் இரவு 9 மணிவரையும் எனத் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது. யாருடைய அனுமதியுடன் பிரதான தெருவொன்றில் கள்ளுக்கடை அமைக்கப்பட்டது என்பது தெரியாமலிருப்பதாகக் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக அவ்விடத்தைச் சேர்ந்த பிரதேச சபையின் பிரதித் தவிசாளருடன் தொடர்பு கொண்ட போது தனக்கு அவ்விடயத்தை யாரும் முறைப்பாடு செய்தாலேயே நடவடிக்கை எடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.


ஆனாலும் அதே பிரதேசத்தைச் சேர்ந்த நீங்கள் நடவடிக்கை எடுக்காமலிருப்பது முறையா? எனக் கேட்ட போது அக் கள்ளுக் கடையால் பிரச்சனைகள் ஏதும் வந்தால் நடவடிக்கைகளை எடுக்கலாம் எனத் தெரிவித்தார். பின்னர் 15



## திருத்தேரில் வில்லூன்றிக் கந்தன்

கடந்த 04.09.2013ல் திருகோணமலை வில்லூன்றிக் கந்தசாமி கோவிலின் தேர்த்திருவிழா நடந்தேறியது.





அத் தேர்த் திருவிழாவில் நடன ஆசிரியை திருமதி. கோ. சரீஸ்குமார் அவர்களின் செல்வ இசை நடன சபா மாணவிகள் நாட்டியாஞ்சலியை நிகழ்த்துவதைப் படங்களில் காணலாம்.



## மண்முனை ஓடத்துறையில் படகு விபத்து

மண்மனை ஓடத்துறை கடல்நீரேரிப் பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த படகு மக்களுடன் பயணித்துக்கொண்டிருக்கும் போது விபத்துக்குள்ளானதாகத் தகவல் கிடைத்துள்ளது.

எழுவான்கரைப் பகுதியில் இருந்து படுவான்கரை நோக்கிப் பயணத்தைத் தொடங்கிய இப் படகின் சங்கில் திடீரென அறுந்ததால் பயணிகள் பலர் வாவியில் விழுந்துள்ளனர். ஆனால்எவ்வித ஆபத்துக்களும் இன்றிப் பயணிகள் கரைசேர்ந்துள்ளனர். கடந்த 2ம் திகதி காலை 6.30 மணிக்கே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இவ்விபத்தால் மண்முனை வாவிப் பிரயாணம் தற்காலிகமாகத் தடையாகியுள்ளது.

இவ்வாவியின் ஊடாகப் பயணத்தைச் செய்வதற்கு இரண்டு இயந்திரப் படகுகள் சேவையிலிருந்த போதும் அவையிரண்டும ஒன்றன் பின் ஒன்றாகப் பழுதடைந்திருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. படகுகளைத் திருத்திப் பயணத்திற்கு வெகு விரைவில் தரவிருப்பதாக மட்டக்களப்பு வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசங்களைச் சென்றடையப் பயன்படும்அம்பிளாந்துறைப் படகுப் பயணச் சேவைகளின் எண்ணிக்கை மக்கள் [illegible] அதிகரிக்கப்பட[illegible]

## சட்டவிரோதத் துப்பாக்கியாளருக்குப் பிணை

அம்பாறை, திருக்கோவில் சாகாமப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட மூவரும் கடந்த செவ்வாய்க்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தலா 50,000 ரூபா ரொக்கப் பிணையிலும் இரண்டு சரீரப் பிணைகளிலும் இவர்களை பொத்துவில் நீதவான் நீதிமன்ற நீதிவான் விடுவித்துள்ளார்.

உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியும் அதற்கான ஐந்து தோட்டாக்களையும் வைத்திருந்த [illegible] பேரில் சாகாம [illegible]யில் இந்தச் சந்தேக நபர்கள் மூவரும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 07 மணியளவில் கைதுசெய்யப்பட்டதாக திருக்கோவில் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த மூவரையும் கைதுசெய்த விசேட அதிரடிப்படையினர் திருக்கோவில் காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

தம்பிலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும் அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருமே கைதுசெய்யப் பட்டதாகவும் தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org